# உதயன்

சுடர் : 36 | கதிர் : 266 | சனிக்கிழமை | ஆவணி 5ஆம் நாள் 21 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## சாவைக் குறைப்பதே அரசின் இலக்கு

கொழும்பு, ஓக. 21
"இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், கொரோனாச் சாவுகளின்

15 ►

# 10 நாள்களுக்கு நாடு முடக்கம்!

- அடங்க மறுப்பவர்களுக்கு ஆப்பு
- 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி
- அத்தியாவசிய சேவைகளை தொடர அனுமதி

கொழும்பு, ஓகஸ்ட். 21
கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்தும் நோக்கில், நேற்றிரவு 10 மணி தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிவரை நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

19 ►

## இந்தமுறை ரூ.2,000 மட்டுமே

கொழும்பு, ஓக. 21
"தனிமைப்படுத்தல் ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் மக்களுக்கு இந்த முறை 2ஆயிரம் ரூபாவே வழங்கக்கூடியதாக இருக்

19 ►

## தவறான முடிவெடுத்து சிறுமி உயிர்மாய்ப்பு

*6 மாதங்களில் ஒரே குடும்பத்தில் மூன்றாவது சம்பவம் இது*

யாழ்ப்பாணம், ஓக. 21
6 மாதங்களுக்குள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்றாவது நபரும் (சிறுமி) தவறான முடிவெடுத்து உயிரிழந்த

19 ►



## ஒரே நாளில் சாவு 195

கொழும்பு, ஓக. 21
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் ஒரே நாளில் 195 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர்

17 ►

## தொற்று 3,835

கொழும்பு, ஓக. 21
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 3 ஆயிரத்து 835 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

19 ►

## கொரோனாவால் யாழ்ப்பாணத்தில் இருவர் நேற்று சாவு

யாழ்ப்பாணம், ஓக. 21
கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் நேற்று இருவர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று

19 ►

## வவுனியாவிலும் நால்வர் சாவு

வவுனியா, ஓக. 21
வவுனியாவில் கொரோனாத் தொற்றால் மூவர் நேற்று உயிரிழந்துள்ளனர். மற்றொருவர் கிணற்றில் வீழ்ந்ததால் மீட்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்த நிலையில். அவருக்

19 ►

## டெல்டாவின் 3 திரிபுகளுடன் பெண்ணொருவர் கண்டறிவு

கொழும்பு, ஓக. 21
நாட்டில் தற்போது பரவிவரும் டெல்டா வைரஸின் மேலும் மூன்று திரிபுகளுடன் கொழும்பில் பெண்ணொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். உலகில் டெல்டாவின் மூன்று திரிபுகளுடன் கொரோனா நோயாளர் ஒருவர் அடையாளம் காணப்

19 ►



## அராஜக நிலைமைக்கு நாட்டை கொண்டுவராதீர்

*மக்களுக்கு ஜனாதிபதி உரை*

கொழும்பு, ஓக. 21
இந்த நாட்டை முழுமையாக மூடுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பில் பொதுமக்கள்

19 ►


போர்க்குற்ற மீறல்களுக்கு

## சர்வதேச விசாரணை மூலமே தமிழருக்கு தீர்வு வேண்டும்

### யாழ்.மாநகர சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 21
"இலங்கையில் இடம்பெற்ற போரின்போது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையின் மூலம், அல்லது விசேட குற்றவியல் தீர்ப்பாயத்தின் மூலம் நீதி வழங்கப்படவேண்டும்" என்று யாழ்ப்பாணம் மாநகரசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானத் துக்கு ஈ.பி.டி.பி கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.
யாழ். மாநகரசபை

19 ►



## 168 கிலோ கஞ்சாவுடன் கடற்படையால் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 21
இந்தியாவிலிருந்து படகு மூலமாக யாழ்ப்பாணத்துக்கு கடத்திவரப்பட்ட 168 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அவற்றைக்

19 ►

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி ஏற்றாதோரே அதிகளவில் உயிரிழப்பு

**கொழும்பு, ஓக. 21**

**இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களில் 91.7 வீதமானவர்கள் தடுப்பூசியின் ஒரு டோஸையேனும் ஏற்றிக்கொள்ளாதவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 295 ஆகும்.**

கொரோனாத் தடுப்பூசியின் ஒரு டோஸை பெற்றுக் கொண்ட 417 பேர் உயிரிழந்துள்ளனர். இது மொத்த உயிரிழப்புகளில் 7.2 சதவீதமாகும்.

கொரேனாத் தடுப்பூசியின் முழு டோஸையும் அதாவது இரண்டு டோஸ்களையும் பெற்றுக் கொண்டவர்களில் 63 பேர் கொவிட் தொற்றின் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இது பற்றி வெளியிடப்பட்ட அறிக்கை இலங்கையில் 2021 ஓகஸ்ட் 13 வரை பதிவான 5 ஆயிரத்து 775 கொவிட் தொடர்பான இறப்புகளை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது.

(எஇ)

# ஒருமித்த கொள்கையுடனே இலங்கை அரசு செயற்படும்

## வெளிநாட்டுத் தூதுவர்களிடம் நிதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு ஓக. 21

ஒருமித்த வெளிவிவகார கொள்கைக்கு அமைய இலங்கை அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்படும். கொரோனாத் தாக்கத்துக்கு மத்தியில் இலங்கையுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவது வரவேற்கத்தக்கது.

இவ்வாறு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச நோர்வே, துருக்கி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் தூதுவர்களிடம் தெரிவித்தார்.

நோர்வே, துருக்கி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் தூதுவர்களுக்கும், நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு நிதியமைச்சில் இடம்பெற்றது.

நாடுகளுக்கிடையிலான இரு தரப்பு ஒத்துழைப்பு, பொருளாதார மேம்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பேச்சில் அவதானம் செலுத்தப்பட்டது.

புதுப்பிக்கத்தக்க சக்தி வலு தொடர்பில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளோம் என்று நோர்வே தூதுவர் ஹில்ட்பேர்க் ஹன்சென் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மட்டத்தில் இதற்கு ஒத்துழைப்பு நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கம் ஒப்பீட்டளவில் கட்டுப்படுத்தப்பட்டவுடன், துருக்கி நாட்டின் வியாபார கவுன்சில் பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையின் தேயிலை உற்பத்திக்கு தமது நாட்டில் உயர் மட்டத்தில் கேள்வி காணப்படுகின்றது என்றும், அதைத் தொடர்ந்து மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் துருக்கி தூதுவர் ஆர். டெமெற் செகர்சியோக்லு நிதியமைச்சரிடம் தெரிவித்தார்.

கொவிட் தாக்கத்துக்கு மத்தியிலும் இலங்கையின் தைத்த ஆடைகள் பெருமளவில் இத்தாலிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இலங்கையின் ஆடை உற்பத்திகளுக்கு தமது நாட்டு சந்தையில் அதிகளவில் கேள்வி காணப்படுகின்றது. சந்தை வாய்ப்பைத் விரிவுப்படுத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

இத்தாலி நாட்டவர்கள் இலங்கைக்கு சுற்றுலாப் பிரயாணங்களை மேற்கொள்ள அதிகளவில் ஆர்வமாக உள்ளார்கள்.

இத்தாலிக்கும், இலங்கைக்கும் இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிப்பது அவசியமாகும் எனவும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் இத்தாலித் தூதுவர் ரிற்றா ஜியுலியானா மனெலா நிதியமைச்சரிடம் வலியுறுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# வீடுகளில் தனிமைப்படுத்தப்படும் தொற்றாளர்கள் வெளியில் நடமாட்டம்

## பொதுமக்கள் விசனம்

சாவகச்சேரி, ஓக. 21

அதிகரித்த கொரோனா பரவலையடுத்து தென்மராட்சி பிரதேசத்தில் வீடுகளில் தங்கவைக்கப்பட்ட தொற்றாளர்கள் வெளியில் நடமாடித் திரிகின்றமை தொடர்பில் பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மருத்துவமனை மற்றும் சிகிச்சை நிலையங்களில் ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்கள் வீட்டில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொற்றாளர்களின் வீட்டில் உள்ள வெளிக் கதவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்ட நிலையில் தொற்றாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் தொற்றாளர்களும் குடும்ப உறுப்பினர்களும் வெளியில் நடமாடுவது தொடர்பில் அவதானிக்கப்பட்டுள்ளது.

தொற்றாளர்களாக இனங்காணப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும், அடுத்தகட்ட அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படும் வரை வெளியில் நடமாட வேண்டாம் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தொற்றாளர் மற்றும் அவரது குடும்பத்தினர் வெளியில் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டால் குடும்பத்தினரை ஒட்டுமொத்தமாக சிகிச்சை மையங்களுக்கு அனுப்பவும் சுகாதாரப் பகுதியினரால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-9)





நாடு முடக்க அறிவிப்பையடுத்து

# பொருள்களை கொள்வனவுசெய்ய கடைகளின் முன்பாக திரண்ட மக்கள்

## எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இதேநிலைமை

வவுனியா, ஓக. 21

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நேற்றிரவு தொடக்கம் நாடு முழுவதும் முடக்கப்படுகின்றது என்று அறிவிப்பு வெளியானவுடன், அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக நாடு முழுவதும் மக்கள் முண்டியடித்தனர்.

நேற்றிரவு தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 வரை நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் அரசி, மா, சீனி, பால் மா, உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் மற்றும் மரக்கறி வகைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகளவிலான மக்கள் வர்த்தக நிலையங்களின் முன்பாக நீண்ட வரிசையில் நின்றமையைக் காணமுடிந்தது.

அதுமட்டுமன்றி, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாகவும் நீண்ட வரிசையில் மக்கள் நின்றமையை அவதானிக்க முடிந்தது. (த-18)

# கொரோனா நோயாளிகளின் சாவுக்கு அரசுதான் பொறுப்புக்கூறவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிக்கை

நாட்டில் இதுவரை பதிவாகியுள்ள அதிகமான கொரோனா நோயாளிகளின் உயிரிழப்புக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும். இந்தப் பொறுப்பிலிருந்து அரசு விலகிக் கொள்ளமுடியாது. அதற்கான உரிமையும் அரசுக்கு இல்லை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வைரசுடன் போராட வேண்டியது விஞ்ஞான ரீதியாகவே அன்றி தன்னிச்சையான அரசியல் ரீதியாகவும், மாயைகளை அடிப்படையாகக் கொண்ட மூட நம்பிக்கை மூலமாகவும் அல்ல என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சிந்தித்து செயலாற்றும் எந்தவொருவரும் அதிர்ச்சிக்குள்ளாகுமளவுக்கு எமது நாடு சீர்குலைந்துள்ளது. கடந்தவாரம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் அறிக்கையிடப்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கையை மாத்திரம் கணக்கில் எடுத்துக் கொண்டாலும் நாடு என்ற வகையில் நாங்கள் தள்ளப்பட்டுள்ள இடம் பயங்கரமானது, இருள்மிக்கது. முன்மாதிரி நிலையிலுள்ள எவரும் இந்த நிலைமையை சிறந்ததென கருத மாட்டார்கள் ஆனாலும் அரசு அதுபற்றி எந்தவித கவனமும் எடுத்துக் கொள்ளவில்லை என்பது மட்டும் உறுதி.

கவலையான விடயம் யாதெனில், முதலாவது மற்றும் இரண்டாவது கொரோனா நோயாளிகள் இந்தநாட்டில் கண்டுபிடிக்கப்பட்டபோது எடுத்த நடவடிக்கைகளையாவது தற்போது பல்லாயிரக்காணக்கான கொரோனா நோயாளர்கள் காணப்படும்போது எடுக்கவில்லை. அந்தளவுக்கு அரசு இந்த பேரழிவின் அபாயங்களை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. - என்றுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.21

குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இராணுவத்தினரால் குருதிக் கொடை நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மேற் கொள்ளப் பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடிதுவக்கு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 200 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கலந்துகொண்டு குருதியை வழங்கினர்.

கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட குருதியை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மருத்துவமனைப் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா முன்னெடுத்துள்ளார். (ஐ-20)




## நல்லூர்ப் பதி வாழும் கந்தா!

நல்லூர்ப் பதி வாழும் கந்தா உன்னை தினமும்
சொல்லாலும் மனத்தாலும் துதிக்கின்றேன்
பொல்லா நோய் தீர்க்க வேண்டும் போற்றிடும் அடியார்கள்
எல்லோரும் வந்து உனை வலம்வரும் நாள் எப்போதோ!

**நா.நியந்திரி,** *நீராவியடி, யாழ்ப்பாணம்.*



## வவுனியாவில் 25 பேருக்கு உலருணவுப் பொதிகள்

வவுனியா, ஓக.21

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 25 பேருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. வவுனியாவில் ஆயிரத்து 645 நாள்களாக தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்து வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கே "உறவுக்கு கைகொடுப்போம்" சுவிஸ் கிளை ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-110)

*மன்னார் மாவட்டத்தில்*

# இறப்பு வீதம் அதிகரிப்பு அவதானம் மிகஅவசியம்

*பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு*

**மன்னார், ஓக. 21**



**ஏனைய மாவட்டங்களை விட மன்னாரில் கொவிட் தொற்றாளர்களாக இருந்து சாவடைந்தவர்களின் சாவு வீதம் குறைவாகக் காணப்படுகின்றபோதும், அண்மைக் காலமாக இந்த நிலை மாறி வருகின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்பு வீதமும் அதிகரித்து வருகின்றது. எனவே பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை (நேற்றுமுன்தினம்) வரை மொத்தமாக 59 ஆயிரத்து 126 பேருக்கு கொவிட் தொற்று நோய்க்கான முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதில் சுமார் 1300 பேர் கர்ப்பிணித் தாய்மார்களாக உள்ளனர். இதேவேளை - இரண்டாவது டோஸ் 47 ஆயிரத்து 406 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது.

இந்த மாதம் மட்டும் இதுவரை கொவிட் தொற்றாளர்களாக 327 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தத் தொகையானது கடந்த காலத்தைவிட அதிகம். அத்தோடு புத்தாண்டு கொத்தணியோடு தொடர்புடைய ஆயிரத்து 16 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த மாதங்களைவிட இந்த மாதம் இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது. இலங்கையில் உள்ள ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் இந்த இறப்பு வீதம் குறைவானதுதான். எனினும், மன்னாரில் கடந்த காலங்களில் இருந்த நிலைமையைவிட இந்த மாத நிலைமை கொஞ்சம் மோசமாவதை உணர முடிகின்றது. ஆகவே மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

அத்தோடு தற்பொழுது வீடுகளிலேயே வைத்து நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்படுவதால் எந்தவிதமான அச்சமும் இன்றி நோயாளிகள் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவித்து தமது சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ம-60)



## 50 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

கொடிகாமம், ஓக.21

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொருண் மியம் நலிந்த 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. கௌதாரிமுனை. வினாசியோடை மற்றும் மண்ணித்தலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கே செரண்டிப் சிறுவர் இல்லத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

## நடமாடும் சேவை மூலமாக தென்மராட்சியில் தடுப்பூசி

*நளைமறுதினம் வழங்க ஏற்பாடு*

சாவகச்சேரி, ஓக. 21

தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனா தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத எழுந்து நடமாட முடியாதவர்களுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நடமாடும் சேவை மூலம் தடுப்பூசி ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


எழுந்து நடமாட முடியாதவர்கள் உள்ள குடும்பத்தினர் பாதிக்கப்பட்டவரின் பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் போன்றவற்றை தமது பிரிவு கிராம அலுவலருக்கு வழங்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

தென்மராட்சி கிழக்கு பிரதேசத்திலும் தென்மராட்சி மேற்குப் பிரதேசத்திலும் இரு குழுக்கள் செயற்பட்டு, மேற்படி தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாரந்தாழ்வுக் குளத்தை அபிவிருத்தி செய்யுங்கள்

## குறித்த பகுதி விவசாய அமைப்புகள் கோரிக்கை





**கிளிநொச்சி, ஓகஸ்ட் 21**

**பூநகரி - மட்டுவில்நாடு மேற்கில் உள்ள நாரந்தாழ்வுக் குளத்தை அபிவிருத்தி செய்து தாருங்கள் என குறித்த பகுதிகள் விவசாய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.**

இது தொடர்பில் அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில்நாடு மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நாரந்தாழ்வுக் குளமானது, கமநல சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமானதாகும். குறித்த குளம் நீண்டகால மாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. இதனால் குளத்தில் பெருமளவு தண்ணீரைத் தேக்க முடியாதுள்ளது. தற்பொழுது வறட்சியான கால நிலை காணப்படும் நிலையில் குளத்தின் பயன்பாடு முழுவதும் கைவிடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே குளத்தை ஆழப்படுத்தி உரியவாறு சீரமைத்து வழங்கினால், மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும் - என்றனர். (ம-113)



## பஸ் தரிப்பிட நிழற்கூரையை சீரமைக்கும்படி கோரிக்கை!!

வவுனியா, ஓக. 21

வவுனியா , நொச்சிமோட்டை கிராம அலுவலர் பிரிவிலுள்ள சாந்தசோலையில் காணப்படும் பஸ் தரிப்பிட நிழற் கூரை நீண்டகாலமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இதனைச் சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏ-9 வீதியில் உள்ள குறித்த பஸ் தரிப்பிடத்தின் கூரைத் தகடுகள் கடந்த சில நாள்களுக்கு முன்னர் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதனால் தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக பஸ் தரிப்பிடத்தில் காத்திருப்பவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே பஸ் தரிப்பிட நிழற் கூரையை சீரமைத்து மக்களின் பயன்பாட்டுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-110)




## விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் சாவு!

வவுனியா, ஓக. 21

வவுனியா . புளியங்குளம் பகுதியில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

வவுனியா ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த அருணா (வயது - 48) என்ற குடும்பத் தலைவரே உயிரிழந்தவராவார். குறித்த நபர் வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியிருந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த அவர் வவுனியா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். (ஐ-110)

## மானிய உரத்துக்கு பதிவுகள் ஆரம்பம்

சாவகச்சேரி, ஓக. 21

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு மற்றும் மறவன்புலவு கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு 2021 / 2022 காலபோக நெற்செய்கைக்குரிய மானிய உர வகைகள் வழங்குவது தொடர்பான பதிவுகள் இடம்பெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பதிவுகள் இடம்பெறும் என்று அவ் அமைப்புக்களின் தலைவர்கள் அறிவித்துள்ளனர். பதிவுக்கு வரும் விவசாயிகள் கடந்த வருடம் உரம் பெற்றமைக்கான பற்றுச்சீட்டு, இவ்வருடத்துக்கு ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றின் நிழற் பிரதிகளுடன் வருகை தருமாறும் அறிவித்துள்ளனர். (ஐ-9)



## வவுனியாவில் சமுர்த்தி வங்கியின் ஊழியர்கள் இருவருக்குத் தொற்று

### வங்கி நடவடிக்கை முடக்கம்



வவுனியா, ஓக. 21

வவுனியா, வேப்பங்குளம் சமுர்த்தி வங்கியில் பணியாற்றும் ஊழியர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து வங்கியின் செயற்பாடுகள் அனைத்தும் நேற்றுடன் முடக்கப்பட்டுள்ளது. வேப்பங்குளம் சமுர்த்தி வங்கியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கடந்த இரு தினங்களாக சுகாதாரப் பரிசோதகர்களால் அன்டிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வெளிக்கள உத்தியோகத்தர் மற்றும் வங்கியில் பணியாற்றும் ஊழியர் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ-110)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

சாவகச்சேரி, ஓக.21

சமுர்த்தித் திணைக்களத்தின் அருணலு வாழ்வாதார செயற்றிட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. கால்நடைகள் மற்றும் கோழிகளை வளர்ப்பதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அவற்றுக்கான கூடுகள் மற்றும் கொட்டகைகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் 900 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டு வரு கின்றன. இதன் அடிப்படையில் கோழிக்கூடுகள், ஆடுகள் மற்றும் மாடுகள் வளர்ப்போருக்கு தொழுவங்கள் போன்றவை வழங்கும் நிகழ்வு பிரதேச செயலரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் மற்றும் சமுர்த்தி அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரு வாரம் முடக்கினால் பொருளாதாரம் சரியாது

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 21**

**நாட்டை இரண்டு வாரங்கள் முடக்குவதால் பொருளாதாரம் முழுவதும் சரிவடைந்து விடப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுதந்திரத்திற்கு பின்னர் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். குறுகிய காலத்தில் நாம் பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் நிலைமையை மறைப்பதற்காக வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதால் மக்களே பாதிக்கப்படுவர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் பொருளாதாரம் ஒரே தடவையில் திடீரென வீழ்ச்சியடையாது. அளவுக்கு அதிகமாக நாணயத்தாள்களை தொடர்ச்சியாக அச்சிடுவதால் பணவீக்கம் உயர்வடையும். அதனால் பொருள்களின் விலையும் அதிகரிக்கும். இதிலும் மக்களே பாதிக்கப்படுவர்.

இந்த விடயங்களில் உலக நாடுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை அவதானித்து, அதிலிருந்து அனுபவங்களைப் பெற்று மக்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். என்றார். (ஏ-இ)

# 'லிட்ரோ' எரிவாயுவின் விலையும் அதிகரிக்கும்




கொழும்பு, ஓக.21

லாஃப் எரிவாயு விலை அதிகரிப்புக்கு நிகராக லிட்ரோ எரிவாயுவின் விலையை அதிகரிக்க வேண்டும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் கோரியுள்ளது. அதனால் விரைவில் விலை அதிகரிப்பு மேற்கொள்ளவேண்டி வரும். இல்லாவிட்டால் வழக்கு விசாரணைக்கு செல்ல வேண்டிவரும் என நுகர்வோர் அதிகாரசபை பணிப்பாளர் குஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

லிட்ரோ எரிவாயு நிறுவனம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை அதிகரிக்க வேண்டும் என்று விடுத்திருக்கும் கோரிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எரிவாயு வழங்கல் தனி உரிமை சந்தைப் பங்கைக் கொண்ட இரண்டு நிறுவனங்களுக்கிடையில் இருப்பதால், ஒரு நிறுவனத்துக்கு எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு அனுமதித்தால், ஏனைய நிறுவனத்துக்கும் அந்த வசதியை பெற்றுக்கொடுப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை கடமைப்பட்டிருக்கின்றது.

லாஃப் எரிவாயு விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதன் பிரகாரம் லிட்ரோ எரிவாயு 12.5 கிலோ கொள்கலனுக்கு 363 ரூபாவாலும் 5 கிலோ கொள்கலனின் விலையை 145 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு இருக்கின்றோம். இன்னும் சில தினங்களில் விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் - என்றார். (ஏ-இ)

# சீனத் துப்பாக்கிகள் வெலிகமவில் மீட்பு

கொழும்பு, ஓக.21

வெலிகம, வலனா காட்டுப் பகுதியில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் துப்பாக்கிகள் சில மீட்கப்பட்டுள்ளன.

5 துப்பாக்கிகள், 8 மகசின்கள் மற்றும் 10 தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிகள் சீனத் தயாரிப்பு என்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஏ-இ)

# ஜே.ஆரின் பாதுகாவலரும் அவரது மகனும் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 21




முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் சிரேஷ்ட மெய்ப்பாதுகாவலர் பொலிஸ் அத்தியட்சகர் ஹமீத் இப்ராஹிம் (வயது 78) கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கடந்த புதன் கிழமை காலமானார்.

இவர் கொழும்பு சாஹிரா கல்லூரி ஆளுநர் சபைத் தலைவராக இருந்துள்ளதுடன் இலங்கை ரக்பி அணியின் வீரராகவும் திகழ்ந்துள்ளார். அதேவேளை நேற்றுமுன்தினம் அவரது மகன் சுல்பிக் ஹமீத் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி காலமாகியுள்ளார். இறக்கும்போது அவருக்கு 41வயது. அவர்கள் இருவரதும் ஜனாஸாக்கள் ஓட்டமாவடி மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டன. (ஏ-இ)

# பல்கலை வெட்டுப்புள்ளி அடுத்த மாத இறுதிக்குள்

கொழும்பு, ஓக.21

2020 க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய, பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப்புள்ளிகள் அடுத்த மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் ஏற்கனவே நிறைவடைந்துள்ளது என்று உப தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சந்தன உடவத்த குறிப்பிட்டுள்ளார்.

நிலவும் கொரோனா தொற்று நிலைமையிலும், குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களை ஈடுபடுத்தி, வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ஏ-இ)

# பவித்திராவின் கணவருக்கு கொரோனா

கொழும்பு, ஓக. 21

போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கணவரான காஞ்சன ஜயரத்னவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் தற்போது மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

காஞ்சன ஜயசேகர சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் என்பதோடு, தற்போது போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் தனிப்பட்ட செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார். (ஏ-இ)

# விவசாயிகளுக்கு கொடுப்பனவுகள்

கொடிகாமம், ஓக. 21

சேதனப்பசளை உற்பத்தி செய்து பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நோக்கில் அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெரும் போகத்தில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளில் சுயமாகவே சேதனப்பசளையை உற்பத்தி செய்து பயன்படுத்துவோருக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தால் உரிய கமக்கார அமைப்புகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

எனவே குறித்த பகுதியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் உரிய கமக்கார அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்று, பூரணப்படுத்தி உரிய ஆவணங்களுடன் இம்மாத இறுதிக்குள் மீளவும் கமக்கார அமைப்புக்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ-159)



# போதுமான ஒட்சிசன் நாட்டில் இருக்கிறது!

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.21

கொரோனா நோயாளர்களுக்கு போதுமான ஒட்சிசன் நாட்டில் உள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா நோயாளர்களுக்கு வழங்குவதற்காக தற்போது 300 தொன் ஒட்சிசன் சுகாதார அமைச்சிடம் உள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதவிர இந்தியாவிலிருந்து நாட்டுக்கு ஒட்சிசனை கொண்டுவருவதற்காக 2 கப்பல்கள் சென்றுள்ளன என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாளாந்தம் 12,000 தொற்றாளர்கள்!

## ஓகஸ்ட் இறுதியில் சாவுகள் இரட்டிப்பாகும் கொழும்பு பல்கலை பேராசிரியர் எச்சரிக்கை



**கொழும்பு, ஓகஸ்ட் 21**

**இலங்கையில் தற்போது நாளாந்தம் 3 ஆயிரத்து 500 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இதை விடவும் மூன்று மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கக் கூடும். எனவே, ஓகஸ்ட் இறுதியில் அல்லது செப்ரெம்பர் முதல் வாரத்தில் தற்போது பதிவாகும் சாவு எண்ணிக்கை இரட்டிப் பாகும் இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பேராசிரியர் மஞ்சு வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இலங்கையில் கொரோனா நிலைவரம் மற்றும் தொற்றுப் பரவலில் இருந்து முன்னோக்கிச்செல்லும் வழிமுறைகள் தொடர்பில் உலக சுகாதார அமைப்பின், இலங்கை அலுவலகம் அண்மையில் ஆய்வொன்றை நடத்தியிருந்தது. இந்த ஆய்வுக்குழுவில் இடம்பெற்றிருந்த நிபுணர்களில் பேராசிரியர் மஞ்சு வீரசிங்கவும் ஒருவர்.

இலங்கையில் கொரோனா நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

இலங்கை தற்போது மிகவும் அவதான மட்டத்திலேயே இருக்கின்றது. நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளின் அடிப்படையில் நாளாந்தம் 3 ஆயிரத்து 500 தொற்றாளர்கள் வரை அடையாளம் காணப்படுகின்றனர். இந்த எண்ணிக்கைக்கும், சமூகத்தில் உள்ள தொற்றாளர்களின் எண்ணிக்கைக்கும் இடையில் பெரும் வித்தியாசம் காணப்படுகின்றது.

நாட்டிலுள்ள அனைத்து தொற்றாளர்களும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை. பி.சி.ஆர். அல்லது அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுபவர்களுள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கை மட்டுமே வெளியாகின்றது.

நாட்டில் தற்போது நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களைவிடவும் மூன்று மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கக்கூடும். அதாவது 3 ஆயிரத்து 500 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனராயின், சமூகத்தில் 10 ஆயிரம் முதல் 12 ஆயிரத்துக்கு இடைப்பட்ட தொற்றாளர்கள் இருக்கக்கூடும் என்பதே எனது ஊகமாகும்.

இதன்படி சுமார் 6 ஆயிரம் வரையான தொற்றாளர்கள் சமூகத்தில் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இவர்களில் சிலருக்கே நோய் அறிகுறிகள் தென்படுகின்றன. பெரும்பாலானவர்களுக்கு தென்படுவதில்லை. இவர்கள் ஊடாகவே தொற்றுப் பரவல் இடம்பெறுகின்றது. அதேவேளை, நாட்டில் நாளாந்தம் 186 வரை உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இது தொடர்பில் வியப்படைய முடியாது. ஜூன் மாதமளவில் இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்திருந்தோம். ஜூலை இறுதியில் அல்லது ஓகஸ்ட் முதல் வாரத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களே தற்போது சாவடைகின்றனர். அந்தக் காலப் பகுதியில் நாளாந்தம் 4 ஆயிரம் வரையான தொற்றாளர்களே சமூகத்தில் இருந்தனர்.

ஓகஸ்ட் இறுதியில் அல்லது செப்ரெம்பர் முதல் வாரத்தில் தற்போது பதிவாகும் சாவு எண்ணிக்கை இரட்டிப்பாகும். இந்தக்கூற்றை விஞ்ஞான பூர்வமாகவே வெளியிடுகின்றேன். ஆகவேதான் நடமாட்டத்தை முழுமையாக கட்டுப்படுத்துமாறு வலியுத்துகின்றோம்.

சாவு எண்ணிக்கையை குறைக்க வேண்டுமானால் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க வேண்டும் என்பதுடன் சிகிச்சைபெறவரும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டும். இந்தநிலைமை ஏற்படவேண்டுமானால் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இதற்குத் தேவையான உச்சபட்ச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.-என்றார். (எ-44)

## முடங்கியது கிளிநொச்சி நகர்


நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் கிளிநொச்சி நகரப்பகுதியின் அனைத்து வர்த்தக செயற்பாடுகளும் நேற்று முடங்கின.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அதிக அளவிலான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து நகரப்பகுதியின் செயற்பாடுகள் அனைத்தும் முடங்கின.

அத்துடன் பொதுமக்கள் கிளிநொச்சி நகரப்பகுதிகளுக்கு வருவதை முடிந்த அளவில் தவிர்த்துக் கொள்ளுமாறு வர்த்தக சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-113)





## ஒட்சிசனுடன் வரும் 'சக்தி'

கொழும்பு, ஓக. 21

இந்தியாவிலிருந்து ஒட்சிசன் கொண்டு வருவதற்காக சென்றிருந்த இலங்கை கடற்படைக்கு சொந்தமான 'சக்தி' என்ற கப்பல் அங்கிருந்து ஒட்சிசனுடன் இலங்கைக்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 17ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்திலிருந்து பயணத்தை தொடங்கிய 'சக்தி' கப்பல், 18ஆம் திகதி சென்னை துறைமுகத்தை சென்றடைந்தது.

இந்தக் கப்பல் நேற்று அதிகாலை ஒட்சிசனுடன் இலங்கை நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளது என்று கடற்படை ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், ஒட்சிசன் தேவையும் அதிகரித்துள்ளதால் அதனை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## நாட்டை முடக்க முன்னர் பலதையும் யோசியுங்கள்

### பிரசன்ன ரணதுங்க அறிவுரை

கொழும்பு, ஓக. 21

நாட்டில் முடக்கத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக முடிவெடுப்பதற்கு முன் பொதுமக்கள் மற்றும் பிற துறைகளில் ஏற்படும் தாக்கத்தை கருத்தில் கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது;

மகா சங்கத்தின் உறுப்பினர்கள் உட்பட மதத் தலைவர்கள், கொரோனாத் தொற்றுநோயை அடுத்து நாட்டை மூடுவதற்கான எதிர்க்கட்சிகளின் பரப்புரையில் இணைந்துள்ளனர்.

சரியான நோக்கமின்றி மற்றும் எதிர்காலத்திற்கான பார்வை இல்லாமல் தொற்றுநோயைக் கையாளும் எதிர்க்கட்சி, தொற்றுநோய் என்ற போர்வையில் அதிகாரத்தைப் பெற காத்திருக்கிறது.

இந்த சவாலான நேரத்தில், அரசு அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதைவிட மக்களின் உயிர்களைப் பாதுகாக்க முயற்சிக்கிறது.

நாடு முடக்கப்படும்போது மாதச் சம்பளம் பெறாத குடும்பங்கள் கடுமையான சிரமங்களை எதிர்நோக்க நேரிடும்.

தங்கள் வரிப்பணத்தில் பணம் செலுத்தி, வீட்டு வாசலில் சாப்பிட்டு குடிக்கும் அந்த மக்களின் வீடுகளில் அரிசி இல்லாவிட்டால் நாட்டை முடக்குவதில் ஏதாவது பயன் உள்ளதா? இத்தகைய சூழ்நிலையில் நாடு முடக்கப்பட்டிருந்தால் மனச்சாட்சிக்கு ஏற்ப மக்களின் வரிப் பணத்திலிருந்து சம்பளம் பெற முடியாது.

சில காரணங்களால் நாட்டை முடக்க முடிவு செய்தால், மாதாந்தச் சம்பளம் பெறாத மக்களை பாதுகாக்க ஒரு திட்டம் தேவை. -என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொதுமுடக்க காலத்தை அர்த்தமுள்ளதாக்குவோம்

இன்று, நாளை, அடுத்தவாரம் என்றிருந்த பிள்ளையார் கல்யாணக் கதை ஒருவாறு முடிவுக்கு வந்துள்ளது. நேற்று நள்ளிரவு முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நாடு முடக்கப்பட்டுள்ளது. வழக்கம் போல அத்தியாவசியத் தேவை தவிர்ந்த அனைத்து நடவடிக்கைகளும் இந்த முடக்கத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. இதுகாலும், அரசு நாட்டை முடக்காததுதான் கொரோனா தாண்டவமாடக் காரணம் என்று அரசின் மீது பாரத்தைப் போட்டுக்கொண்டிருந்த நாம், முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தக் காலத்தில் எவ்வாறாகச் செயற்படப் போகின்றோம் என்பதுதான் பதிலில்லாக் கேள்வி.

கொரோனாத் தொற்றால் இலங்கையில் பொதுமுடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை இதுவொன்றும் முதல் முறையல்ல. இதற்கு முன்னரும் சில தடவைகள் முழுமையாகவும் பகுதியளவிலும் இந்த முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது தான். ஆனால், அப்போதெல்லாம் எம் மக்கள் வீட்டுக்குள் முடங்கியா இருந்தனர் என்று எம்மை நாமே சுய பரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.

அத்தியாவசியத் தேவை என்ற போர்வையில் வெளியில் நடமாடித் திரிந்தோர் மிக அதிகம். கிளினிக் கொப்பிகளும், மருந்துச் சீட்டுகளும் முடக்கத்தின் போதான போக்குவரத்துப் 'பாஸ்' போன்றுதான் பலருக்கும் அமைந்திருந்தன. அதைக்காட்டி ஏமாற்றுவேலை செய்து தேவையற்ற போக்குவரத்தை மேற்கொண்டவர்கள் எம்மில் பலர். அத்தகைய வித்துவத்தனம் இந்த முடக்கத்தின் போது வேண்டவே வேண்டாம்.

தினசரி 4,000 தொற்றாளர்கள் மற்றும் 200 பலிகள் என்ற எண்ணிக்கையை நெருங்கிக் கொண்டிருந்த நிலையில்தான் இந்த முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்படுபவர்கள்தான் இந்த 4,000 என்ற எண்ணிக்கை. எனின் சமூகத்தில் எவ்வளவுபேர் இன்னும் சுற்றிக் கொண்டிருப்பார்கள் என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் இப்போது இருப்பது முன்னைய நிலைகளைப் போன்ற நிலையல்ல. டெல்டாவின் தீவிரப் பரவல் நிலைகொண்டுள்ள பேராபத்து மிகுந்த சூழலில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான பல காரணங்களால் இந்தப் பொதுமுடக்கம் மிகமிக அவசியம் மிக்கதாக அமைந்துள்ளது.

தொற்றுத் தீவிரமாவதற்கு அரசு பொதுமுடக்கத்தை அறிவிக்காமைதான் காரணம் என்று அரசின் மீது ஒட்டுமொத்தப் பழியையும் போட்டுவிட்டு, பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் விதிமுரண்களில் நாம் ஈடுபட்டால் அது அரசுக்கு ஒரு பிடிமானமாகவே போகும். அரசு செய்தது சரி என்ற தோரணையை ஏற்படுத்தும். எனவே நடைமுறைப்படுத்தியுள்ள இந்த முடக்கத்தை கூடுதல் அக்கறையுடனும் பொறுப்புணர்வுடனும் கடைப்பிடித்து எமது தார்மீகப் பொறுப்பையும் கடமையையும் நிலைநாட்டுவது இலங்கைக் குடிமக்கள் என்ற ரீதியில் எமக்கு இருக்கும் முதன்மைப் பொறுப்பு.

அதேநேரம் பொலிஸாரும் இந்த 10 நாள்கள் முடக்கத்தை இறுக்கமான கண்காணிப்புக்கள், கட்டுப்பாடுகள் மூலம் அர்த்தமுள்ளதாக மாற்ற முன்வர வேண்டும். இதுதான் எமக்குக் கிடைத்துள்ள இறுதி வாய்ப்பு. கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து முழுவதும் விடுபடுவதற்கு இந்த முடக்கம் போதுமானதாக இல்லாவிட்டாலும் ஓரளவேனும் விடுபட எத்தனிப்போம், பொறுப்புணர்வோம்.



### காஸ் சிலிண்டர், அங்கர் பெட்டிகளுடன்

# வலி. தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்றுப் போராட்டம்



**மானிப்பாய், ஓக. 21**

**வலி.தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் காஸ் சிலிண்டர் மற்றும் வெற்று அங்கர் பெட்டி உள்ளிட்டவற்றுடன் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் அமர்வு நேற்று கொரோனா நடைமுறைகளைப் பின்பற்றி தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட உறுப்பினர்களே தற்போது பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி என்பவற்றை சுட்டிக்காட்டி குறித்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த எதிர்ப்பு நடவடிக்கையின் பிற்பாடு மறைந்த வல்வெட்டித்துறை பிரதேச சபைத் தவிசாளர் கருணானந்தராசாவுக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அவரது படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செய்யப்பட்டது. (ஜ - 319)

# முள்ளியவளைப் பிரதேசத்தின் வர்த்தக நிலையங்களும் பூட்டு

முள்ளியவளை, ஓக. 21

நாட்டில் கொரோனா தொற்று அதிகரிப்பை கட்டுப்படுத்தும் நோக்கில் முள்ளியவளை பிரதேசத்தில் உள்ள வியாபார நிலையங்களையும் பூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தகர் சங்கத் தலைவர் த. தேவராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் முள்ளியவளை பிரதேசத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் பூட்டி மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 30 ஆம் திகதி வரை குறித்த வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டே இருக்கும். முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தகர் சங்கத்தினர் இன்று தொடக்கம் வணிக நிலையங்களை பூட்டவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில், முள்ளியவளை பிரதேச வர்த்தகர் சங்கத்தினரும் நாளை முதல் கடைகளை பூட்டுவதாக அறிவித்துள்ளனர். அத்துடன் அரசு பொது முடக்கத்தை செயற்படுத்தாத நிலையில் வர்த்தக சங்கங்கள் தாமாக முன்வந்து தன்னுணர்வு முடக்கத்தை தொடர்ச்சியாக அறிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18 . 06 . 1993

மறைவு
31 . 08 . 2020

**அமரர் கந்தசாமி அனோஜன் (அனோ)**

திதி : பூர்வபக்க சதுர்த்தசி (21.08.2021)

ஓராண்டு சென்றாலும் தாங்கமுடியவில்லை
உன் இழப்பை
காலங்கள் கடந்தாலும் மறக்க முடியுமா
உன் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உன்
நினைவுகள் தொடரும்.

வாகையடி கிழக்கு வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

அம்மா, அக்காமார்
குடும்பத்தினர்

*வெளிநோயாளர் பிரிவில்*

## சிகிச்சை பெற வந்த 8 பேருக்குத் தொற்று

சாவகச்சேரி ஓக. 21

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்தவர்களில் நேற்று எட்டுப் பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

காய்ச்சல்,இருமல் போன்ற அறிகுறிகளுடன் சிகிச்சை பெற வந்தவர்களுக்கு மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் 8 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ-9)

## கைக்குண்டு மீட்பு



கிளிநொச்சி, ஓக.21

கிளிநொச்சி முகமாலையில் உள்ள கோவானக்குளத்தில் இருந்த கைக் குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

குறித்த குளத்தை அபிவிருத்திக்காக பார்வையிடச் சென்ற நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்னவின் இணைப்பு செயலர் சுமுது தலைமையிலான குழுவினரால் குறித்த கைக் குண்டு அடையாளம் காணப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பகுதி ஆபத்தான பகுதியாக அடையாளப்படுத்தப் பட்டதுடன், சம்பவம் தொடர்பில் அருகில் உள்ள இராணுவத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து படையினரின் உதவியுடன் கண்ணிவெடி அகற்றும் மனித நேய பணியாளர்களால் குறித்த கைக் குண்டு பாதுகாப்பாக அகற்றப்பட்டது. (ஐ-6)

# அசாதாரண நிலைக்குத் தீர்வு அரசுடன் செயற்படத் தயார்

## எதிர்க்கட்சி தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 21**

**'கொரோனா வைரஸ் எவ்வளவு காலம் இலங்கையில் இருக்கும் என கூறமுடியாது. எனவே, அரசியல் பிரச்சினைகளைத் தவிர்த்து, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு அரசுடன் இணைந்து பணியாற்ற எதிர்க்கட்சி தயாராக இருக்கின்றது. - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:

உலக நாடுகளைப் போன்று இலங்கையும் முகங்கொடுத்துள்ள கொரோனா வைரஸுக்கு எதிரான அரசின் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுதான் எதிர்க்கட்சியாக நாங்கள் இந்த நேரத்தில் செய்ய வேண்டிய பங்களிப்பாகும்.

எதிர்க்கட்சித் தலைவரும் இது தொடர்பில் பல விடயங்களைப் பேசி வருகின்றார். நாடாளுமன்றத்தில் அரசின் பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி வருகின்றார். எனவே, இவ்வாறான நெருக்கடியான நிலையில் நாங்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதியைச் சந்தித்து இது தொடர்பில் பல விடயங்களைக் கலந்துரையாடியுள்ளார். எனவே, நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும், இந்தக் கொரோனாவைக் கட்டுப்படுத்த, அதிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்க பங்களிப்புச் செய்ய வேண்டும் - என்றார்.(த-22)

## இரத்தினக்கல் திருட்டு இருவர் கைது

கொழும்பு, ஓக.21

இரத்மலானை மற்றும் மடிவெல பகுதிகளில் 4.7 மில்லியன் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்கள் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரு சந்தேகநபர்களும் களுத்துறை மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் களுத்துறை மற்றும் மடிவெல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களில் ஒருவர் களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மற்றையவர் 2 லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-இ)



## சம்பளத்தை வழங்கிய பந்துல

கொழும்பு, ஓக.21

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தனது மாதாந்த சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்கியுள்ளார்.

நாட்டில் நிலவிவரும் நிதி நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு அவர் தனது ஒரு மாதச் சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்கியுள்ளார்.

அமைச்சரின் இந்த நடவடிக்கையை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பாராட்டியுள்ளார் என்று ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர கடிதம் மூலம் அமைச்சர் பந்துலவுக்கு அறிவித்துள்ளார். (எ-இ)

# பாண் மற்றும் பருப்புக்கறி ரூ.150 உணவு விலைகளும் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 21

திங்கட்கிழமை முதல் வெதுப்பக உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் என்பதால் உணவகங்களில் உணவுப் பொருள்களின் விலையும் அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சீனி மற்றும் ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை உயர்த்துவதற்கான அரசின் முடிவைத் தொடர்ந்து வெதுப்பக உற்பத்திகளின் விலையை உயர்த்துவது நியாயமானது.

பாண் மற்றும் பிற வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலையை அதிகரிப்பதற்கான பேக்கரி உரிமையாளர்களின் முடிவு அரசையோ அல்லது பொதுமக்களையோ சிரமப்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை என்று இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேலா சம்பத் கூறினார்.

அத்தியாவசிய தொழிலாளர்களுக்காக சிறிய அளவிலான கடைகள் மட்டுமே திறக்கப்பட்டுள்ள நிலையில், கொவிட்-19 நோய்த்தொற்றுக் காரணமாக பல உணவகங்கள் மூடப்பட்டுள்ளன.

அதனால் கடைகளில் விற்கப்படும் அரை இறாத்தல் பாண் மற்றும் பருப்புக் கறி 150 ரூபாவாகவும், தேநீர் (பிளேன் ரீ) 25 ரூபாவாகவும் உயர்த்தப்படும் என்று இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேலா சம்பத் தெரிவித்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் செல்வச் சந்தியான் திருவருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்



நவீன வடிவமைப்புக்களில் தரமான 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதச் சான்றிதழுடன் பெற நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

# ஸ்ரீ குமரன்

## நகை மாளிகை

## Sree Kumaran Jewellers













இல. 74 பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

021 226 4465, 077 873 3482


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானக் கந்தனின் தேர்த்திருநாளில்
# அவன் கழலடி பணிவோம்

மதுரக்கவி. காரை அருளானந்தம்



ஈழமணித் திருநாட்டின் தென்பால் கதிர்காமக் கந்தனுடைய ஆலயம் விளங்குவது போல, வடபால் செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. கதிர்காமத்தில் காவடிக்கந்தனாகவும், மாவிட்டபுரத்தில் அபிஷேகக் கந்தனாகவும், நல்லூரில் அலங்கார கந்தனாகவும் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற முருகப்பெருமான்; செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனாக ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

வட இலங்கையின் வடமராட்சிப் பகுதியில் தொண்டைமானாறு எனும் புராதன நகரம் உண்டு கருணாகரத் தொண்டைமான் எனும் சிற்றரசருடன் தொடர்பு பூண்ட நகரம் என்பதால் இந்தப் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது.

தொண்டைமான் ஆற்றங்கரையில் கழிமுகத்துக்கு அண்மையில் செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது. செல்வச்சந்நிதி ஆலயம் சின்னக்கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை எனும் சிறப்பு பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. கோயிற் சூழலில் இயற்கை அழகு எல்லோரையும் ஈர்ப்பது மருத மரக்காடும் பாக்கு நீரிணை கடலும் மருங்கே காணும் வயலும் இடையே கிழக்கே இருக்கும் வல்லை வெளியும் திணை ஒழுக்கம் காட்டும். செல்வச்சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். இந்த ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டுக்கும் கதிர்காமத்தில் நடைபெறும் வழிபாட்டுக்கும்

(இதன் தொடர்ச்சியை 11 ஆம் பக்கத்தில் பார்க்கவும்)


எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் செல்வச் சந்நிதியான் தேர்த்திருவிழா பேரருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ சுசிலா
ஆபரண மாளிகை
Sri Susila
Gold House
(916 KDM) தங்க நகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



239, பிரதான வீதி, பருத்தித்துறை.
239, Main Street, Point Pedro.
T.P No: 077 721 0206, 021 226 1003

moving money for better
WESTERN UNION
செல்வச் சந்நிதித் தேர்த்திருவிழா சிறப்புற பிரார்த்திக்கின்றோம்
NewAMBIGA STORES
MONEY TRANSFER
Money Master
நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ்
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு
உள்நாட்டு, வெளிநாட்டு
துரித தபால் பொதிகள் சேவை
உடனுக்குடன்
அனுப்ப நாடுங்கள்



இல.33, பிரதான வீதி,
நெல்லியடி.
RIA Money Transfer
உறவுகளிடமிருந்து western union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள்பெற்றுக் கொள்ளலாம்.
Mob - 077 667 9340 Fax - 021 226 4197
Tel - 021 226 3571 newambiga@gmail.com
DHL aramex SHYNET

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் செல்வச் சந்நிதியான் திருவருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்.

LINGAA
3rd Anniversary
லிங்கா பெஷன்



Mega offer
Sarees &
Fancy Jewellery
From 30% to 50 % Off*
நல்லூரில் ஆடைகளின் சாம்ராஜ்யம்
Whatsapp - 076 644 0722
Tel: 021 221 4999
www.lingaa.lk
www.fb.com / lingaa.lk
No. 302A, TEMPLE ROAD, NALLUR, JAFFNA.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அன்னதானக் கந்தனின் தேர்த்திருநாளில் ............



நெருங்கிய ஒற்றுமை உண்டு.
இரு ஆலயங்களிலும் வேதாகம முறையிலான வழிபாடு இல்லை. பூசையில் மந்திரங்கள் இடம் பெறுவதில்லை. வேறு எந்தக் கோயில்களிலும் காணப்படாத சடங்கு முறையே சந்நிதியில் காணப்படுகின்றது. கதிர்காமக் கொடியேற்ற நாளில் சந்நிதி முருகன் கதிர்காமம் செல்வதாகவும் பின்னர், கதிர்காமத்து தீர்த்தத் திருவிழாவன்று சந்நிதி திரும்பி வருவதாகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன.

ஒருநாள் இரவு முருகன், பூசாரியார் கதிர்காமரை நித்திரையில் இருந்து எழுப்பி அப்பா நான் பாதயாத்திரையாக வந்தமையால் பசி, தாகம் அதிகரித்துள்ளது. ஏதும் உண்பதற்கு கொடு என்று கேட்டாராம்; கதிர்காமரும் நான் தங்களுக்கு அமுது படைக்க இவ்



வேளை எங்கு போவேன் என்று மனம் நோக. உன்னிடம் இருக்கும் சிறிதளவான பயற்றைத் துவைத்து இளநீரும் தா என்று கேட்டு வாங்கி முருகன் திருவமுது செய்தார்.

இன்றும் அவ்விதமாக பயற்றம் உருண்டையும் இளநீரும் கதிர்காமத்திலிருந்து திரும்பி வருகின்ற முருகனுக்கு பூசையில் படையல் செய்வது நடைமுறையில் உள்ளது. செல்வச்சந்நிதி சூழலிலே காணப்பட்ட மடங்கள் சில தற்போது சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. அந்தக் காலங்களில் அம்மடங்களிலே அடியவர்கள் தங்கவும் அன்னதானம் நிறைவேற்றவும் வசதியாக இருந்தது. இன்றும் சந்நிதியான் ஆச்சிரமம், ஆனந்தா ஆச்சிரமம் போன்ற மடங்கள் அப்பணியை நிறைவேற்றி வருகின்றனர்.

சந்நிதி பூசை நேரங்களில் ஒலிக்கும் பறை மேளம் அன்பர்களை பரவசப்படுத்தும் நிறைந்த கற்பூர ஒளியிலும் செறிந்த புகை மண்டலத்தின் நடுவிலும் மின்னல் போல ஒளிரும் வேலின் தோற்றம் கண்டு பரவசப்படாதார் எவருமில்லை என்றே கூறலாம்.

சந்நிதி மூலஸ்தானத்தில் வேலே காட்சியளித்து எம்மை ஆட்சி செய்கின்றது. அசாதாரண சூழ்நிலைக்கு ஏற்றவாறு அன்னதானக் கந்தனின் பிலவ வருஷ வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று 21-08-2021 சனிக்கிழமை ஆற்றங்கரையானின் தேர்த்திருவிழா.

இந்நாளிலும் இல்லங்களிலிருந்து கொடிய கொரோனா வியாதியிலிருந்து எம்மை பாதுகாக்க சந்நிதியான வழிபடுவோம்.

'அப்பன் எம்மையெல்லாம் கருணை கூர்ந்து வாழ்வாங்கு வாழ்விப்பான்".

**"அன்னதானக் கந்தனுக்கு அரோகரா"**

சந்நிதியானின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.
தீபா Theebaa Jewelery
நகை மாளிகை
ஓடர் நகைகள் தரமான 22 கரட் தங்கத்தில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி, நெல்லியடி. 077 664 8768

செல்வச் சந்நிதித் தேர்த்திருவிழா சிறப்புற அகிலமெலாம் அவனருள் பெருகவும் பிரார்த்திக்கின்றோம்
அருண்
புடைவையகம் & அழகுமாடம்
சாறி, சல்வார்
ஆண்களுக்கான சேட், ரீசேட்
மற்றும் சிறுவர்களுக்கான
சகல ஆடைவகைகள்
அனைத்திற்கும்
நாடவேண்டிய ஒரே இடம்
ARUN TEX
& Fancy Palace
பிரதான வீதி,
நெல்லியடி
021 226 2857

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் செல்வச் சந்நிதியான் தேர்த்திருவிழா பேரருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்.
RAINBOW TILES STORES
றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்
பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள்,
எஸ்லோன் பி.வி.சி யைப் வகைகள், கட்டடப் பொருட்கள், விவசாய மருந்து வகைகள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சாரப் பொருட்கள் என்பன மலிவு விலையில் கொள்வனவு செய்யலாம்.
பருத்தித்துறை வீதி,
மந்திகை புலோலி
021 226 2696, 077 869 5418

வாயுபுத்ரா போன் சொப்
Vayuputhra
Phone Shop & Vivo Distributors
அனைத்து விதமான கட்டணங்களையும் இங்கு மேற்கொள்ளலாம்.
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் செல்வச் சந்நிதியான் திருவருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்.
All Types of Recharge Available Here
அனைத்து சேவைகளும் நியாயமான விலையிலும் துரித வேகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.
❖ டிஷ் (Dish TV) கட்டணங்கள்
❖ மின்சார கட்டணங்கள்
❖ தொலைபேசி கட்டணங்கள்
❖ காப்புறுதி கட்டணங்கள்
❖ Phone accessories
❖ Phone Sales
❖ Repairing
❖ Unloking
❖ Software
OPPO F19Pro
வாயுபுத்ரா புக்கிங் சென்றர்
சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளைமேற்கொள்ள முடியும்.
ஆசனப் பதிவகம்
யாழ் ⇆ கொழும்பு (தினமும்)
இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Mob: 077 8840 775 No.364, Hospital Road, Jaffna. Mob: 077 36 44 246

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**மருத்துவ நிபுணர். டாக்டர்.சி.ரகுராமன்**
MBBS, MD (Obs&Gny), MRCOG(UK)
சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்.
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.


# கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணிகள்



2

## 1.பெண்கள்

ஆரோக்கியமான கருத்தரித்தலுக்கு சூல்கொள்ளல் (ovulation) சீராக நடைபெறவேண்டும். ஒரு பெண் பூப்படைதலில் இருந்து மாதவிடாய் நிறுத்தம் வரை ஒவ்வொரு மாதவிடாய் சுழற்சியின் நடுப் பகுதியிலும் (28 ஆம் நாள் சுழற்சியில் 14 ஆம் நாள்) சூல் கொள்ளல் நடைபெறும். இந்தச் செயற்பாடு பெண்களில் சுரக்கப்படும் சிலவகையான ஓர்மோன்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த ஓர்மோன்கள் அல்லது அதன் சுரப்பிகளில் ஏற்படும் மாற்றங்கள் சூல்கொள்ளலை பாதிப்பதனால் கருத்தரிப்பு தாமதமடையலாம். இந்த ஓர்மோன்கள் சுரக்கும் சுரப்பிகளில் உண்டாகும் கட்டி,கிருமித் தொற்று,குழந்தை பிறப்பின் போதான அதிக குருதிப் பெருக்கினால் அந்தச் சுரப்பிகளுக்கு ஏற்படும் சீரற்ற குருதி விநியோகம் (Sheehans Syndrome),புற்றுநோய்க்கான சிகிச்சைகள் (Radiotherapy,Chemotherapy), சில பிறப்பியல் காரணிகள் , மூளையில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை போன்றன இத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும். கடுமையான உடற்பயிற்சி, மன அழுத்தம் என்பனவும் ஓர்மோன்கள் வெளியேற்றத்தினைப் பாதிக்கும் காரணிகள் ஆகும்.
சூல்கொள்ளலை பாதிக்கும் சூலகக் காரணிகளுள் பொலிசிஸ்டிக் ஓவரியன் சின்ரோம் (PCOS) மிகமுக்கியமானதாகும்.
PCOS ஆனது சூலகத்தில் அதிக எண்ணிக்கையான பாதிப்பற்ற சிறிய நீர்க்கட்டிகள் காணப்படும் ஒரு நிலையாகும். இவை காணப்படுவதால் முட்டை வளர்ச்சி மற்றும் வெளியேற்றம் என்பன தடைப்படலாம். ஆகவே கருத்தரித்தலில் இடர்கள் ஏற்படும். PCOS இல் ஒழுங்கற்ற மாதவிடாய்ச் சக்கரங்கள், மாதவிடாய் தடைப்படல், அதிகளவான ஆண் பரம்பலிலான உரோமம் வளர்தல், அதிக முகப்பருக்கள், உடற்பருமன் அதிகரித்தல் என்பன சிலபொதுவான அறிகுறிகளாகும். PCOS இனை உடல் நிறைகுறைப்பு அல்லது சரியான உடற்திணிவுச் சுட்டியைப் பேணல் மூலம் கட்டுப்படுத்த முடியும்.
சூலகம் செயலிழத்தல் மற்றுமொரு காரணியாகும். இதற்குரிய சரியான காரணம் அறியப்படாத நிலையில் சில கண்டறியப்பட்ட காரணிகளாவன:
மரபணு ரீதியான மாற்றங்கள், வைரஸ் தொற்றுக்கள் (உ+ம்: கூகைக்கட்டு) இடுப்புக் குழியில் ஏற்படும் கிருமித்தொற்று, கசரோகம் (TB) சில ஓட்டோ இமியுன் பிரச்சினைகள் (Auto immune disease).
இவற்றால் உரியகாலத்துக்கு முன்னதாகவே சூலகத்தின் செயற்பாடுகள் மந்தமடைந்து முட்டைவிருத்தியைப் பாதிப்பதால் கருத்தரித்தல் தாமதம் அடையும்.
சூல்கொள்ளலின் பின் முட்டை பலோப்பியன் குழாயினூடாகப் பயணித்து,அங்கு விந்துடன் கருக்கட்டல் வேண்டும். பலோப்பியன் குழாயில் ஏற்படும் பாதிப்புகளும் கருக்கட்டலைப் பாதிக்கும். இடுப்புக்குழியில் ஏற்படும் கிருமித் தொற்று, இடுப்புக்குழியில் செய்யப்படும் சத்திர சிகிச்சை,என்டோமெட்ரியோசிஸ் (Endometriosis),பாலியல் நோய்கள் என்பன பலோப்பியன் குழாயில் அடைப்பை ஏற்படுத்தும் அல்லது அதன் தொழிற்பாட்டைப் பாதிக்கும். ஆகவே முட்டை விந்துடன் இணைந்து கருக்கட்டுவது சாத்தியமற்றதாகின்றது.
கருக்கட்டிய முட்டையும் விந்தும் நுகம் எனப்படும். நுகமானது கருப்பை உட்சுவரில் உட்பதிக்கப்பட்டு சிசுவானது விருத்தியடையும். இதற்கு கருப்பையின் ஆரோக்கியம் அவசியம். கருப்பைக்கட்டிகள் (பைபிரோயிட் /Filproid), பொலிப்புக்கள் (Polyps), பிறப்பின் போதான கருப்பையின் அமைப்பு மற்றும் வடிவத்திலான வேறுபாடுகள், கருப்பை சத்திரசிகிச்சைகள், இடுப்புக்குழி கதிர்வீச்சு போன்றன கருப்பையினுள் நுகம் உட்பதிதலையும் நுக விருத்தியையும் பாதிக்கும்.



மருத்துவக்காரணிகள் சிலவும் கருத்தரிப்பைத் தாமதமடையச் செய்யலாம். புற்றுநோய்க்கான கதிர்வீச்சு,மருந்துகள் ,வலிநிவாரணத்துக்காகப் பயன்படுத்தும் மருந்துகள் கருத்தரித்தலை தாமதிப்பதுடன் மாதவிடாய்ச் சக்கரத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தும். எம்மவரிடையே பெண்களின் போதைப்பொருள் பாவனை மிக அரிதாக இருப்பினும் அவற்றின் பாவனை பலவகையில் கருத்தரித்தலை தாமதிப்பதில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை அறிந்திருத்தல் அவசியமானதும் நன்மைக்குரியதுமாகும்.



**குழந்தையின்மைக்கான விளக்கங்களும் தீர்வுகளும்**



## 2. ஆண்கள்

விந்துருவாக்கச் செயன்முறையினால் உருவாக்கப்படும் விந்துக்களின் அளவு மற்றும் தரம் ஆகிய காரணிகள் இயற்கையான கருத்தரித்தலில் செல்வாக்குச் செலுத்துகின்றன.
விதைப்பையில் காணப்படும் சுக்கிலச் சிறுகுழாய்களில் விந்துகள் உருவாகும் செயன்முறை ஓர்மோன்களினால் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்தச் செயன்முறைக்கு அண்ணளவாக 3 மாதங்கள் எடுப்பதால் ,சிகிச்சை முறைகளின் விளைவுகளை அறிவதற்கும் இந்தக் குறிப்பிட்ட காலப்பகுதி கருத்தில் கொள்ளப்படவேண்டும்.
ஆண்களால் கருத்தங்கல் தாமதவடைவதற்கான காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். முதலாவதாக,விந்து உருவாக்கத்தில் பங்குகொள்ளும் ஓர்மோன்களுடன் தொடர்புடைய காரணிகள், இரண்டாவதாக, விதைப்பையில் ஏற்படும் பிரச்சினைகள் ,மூன்றாவதாக, விதைப்பையில் விந்து உருவாக்கத்தின் பின்னர் விந்து வெளியேறும் பாதையில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கைமுறை மாற்றங்கள் என வகைப்படுத்தலாம்.
விந்துருவாக்கச் செயன்முறையானது ஆண்களின் உடலில் உள்ள ஓர்மோன்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டு, கட்டுப்படுத்தப்படுகின்றது. குறிப்பாக, மூளையில் இருந்து சுரக்கப்படும் சில ஓர்மோன்கள் (FSH,LH) விதைப்பையில் விந்துருவாக்கத்தில் ஈடுபடும் கலங்களைத் தூண்டுவதுடன், வேறு சில ஓர்மோன்களைச் சுரக்கச் செய்து (ரெஸ்ரெஸ்திரோன்) விந்து உருவாக்கத்திலும், முதிர்ச்சியிலும் உதவுகின்றன. மூளையில் ஏற்படும் கட்டிகள், புற்றுநோய்கள், சத்திரசிகிச்சைகள் மற்றும் காயங்கள் என்பன விந்து உருவாக்கத்திலும் முதிர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.
எனவே,மருத்துவ ஆலோசனையின் போது இவ்வாறான விடயங்களைத் தெளிவுபடுத்தவேண்டும்.
விதையில் ஏற்படும் கிருமித்தொற்று,விதைப்பையினுள் விதைகள் இறங்காமை, பரம்பரையலகு தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் என்பன விந்துருவாக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்தி கருத்தரிப்பைத் தாமதமடையச் செய்யும். மேலும் சிலமருந்துகள், ஓர்மோன்கள் (ஸ்ரீரொயிட், ரெஸ்ரெஸ்ரிரோன்) என்பன சிகிச்சைக்காகவும் ,தொழில்முறை சார்பாகவும் (Body buildign)அதிகமாகப் பயன்படுத்தும் போது இவை மேற்குறிப்பிட்ட விந்துரு வாக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஓர்மோன்களின் சமநிலையைக் குழப்புவதால் விந்துருவாக்கம் பாதிப்படைகிறது.
விதைப்பையினுள் உருவாக்கப்பட்ட விந்தானது முதிர்ச்சியடைந்து சுக்கிலப்பாயமாக விதையிலிருந்து ஆண்குறிவரை பயணித்து உடலுறவின் போது பெண்ணின் யோனியினுள் விடுவிக்கப்படுகிறது. இவ்வாறு பயணிக்கும் பாதையில் கிருமித்தொற்று, சத்திரசிகிச்சை,சில பரம்பரையலகு தொடர்பான நோய்களினால் பாதிக்கப்படுதல் அத்துடன் சிறுநீர்பாதையில் உள்ள இறுக்கித் தசைகள் தொழிற்படாமையால் விந்துகள் பின்னோக்கி சலப்பையினுள் வெளிப்படுத்தப்படுதல் (Retrograde ejaculation) என்பவற்றால் கருத்தரித்தல் தாமதம் அடையலாம்.
ஆண்களின் வயது கருக்கட்டலில் முக்கியபங்கு வகிப்பது விஞ்ஞான ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் இவ்விளைவானது பிள்ளைகளிலும் தாக்கம் செலுத்தலாம் எனக் கூறப்படுகிறது.
தொழில்முறை சார்ந்த இராசயனங்களின் வெளிப்பாட்டினால் சுக்கிலப்பாயத்தின் அளவு மற்றும் தரம் பாதிக்கப்படலாம். உடல் வெப்பநிலையைவிட $2^{\circ}$ செல்சியஸ் குறைவான வெப்பநிலையே விந்தாக்க செயற்பாட்டுக்கு அவசியம். ஆகையால் விதைகள் உடலுக்கு வெளியே விதைப்பையினுள் காணப்படுகின்றன. ஆகவே விதை, விதைப்பை அதிக வெப்பத்துடன் கூடியநேரம் தொடர்புபடும் சந்தர்ப்பங்களில் விதைப்பையின் வெப்பநிலை அதிகரிப்பதுடன் ஒழுங்கான விந்தாக்கம் நடைபெறுவதும் பாதிக்கப்படுகிறது. மேலும் எக்ஸ்-றே கதிர்வீச்சு,பார உலோகங்கள் (ஈயம்,இரசம்) ,களைகொல்லி போன்றவற்றுக்கு தொழில்முறையாக வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் விந்தாக்கச் செயன்முறையைப் பாதிப்பதாகக் கூறப்படுகிறது. வாழ்க்கைமுறை சார்பான சிலகாரணிகளும் ஆண்களில் விந்துருவாக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதால் கருத்தங்கலை தாமதமடையச் செய்கிறது. அதிகரித்த உடல் நிறையானது ஒழுங்கான விந்துருவாக்கத்தைப் பாதிப்பதுடன் ,அதற்கு அவசியமான ஓர்மோன்களின் சமநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். இலங்கை போன்ற நாடுகளில் உடற் பருமன் அதிகரித்தல், தற்போது அதிகரித்துவரும் ஒரு பிரச்சினையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் அதிகளவான மதுப்பாவனை, சிகரெட் பாவித்தல் மற்றும் போதைப் பொருள்களின் பாவனையானது சுக்கிலப் பாயத்தின் தரத்தைப் பாதிப்பதுடன், உடல் உறவில் நாட்டமின்மை, ஆண்குறியின் விறைப்புத்தன்மை குறைவடைதல் போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். தெளிவான மருத்துவக்கணிப்பீடு மற்றும் பொருத்தமான பரிசோதனைகள் மூலம் கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணிகளை அறிதல், மிகச்சரியான கருவளசிகிச்சை முறையைத் தெரிவுசெய்ய உதவும் .
ஆயினும் சுக்கிலப்பாயத்தின் தரம் குறைவாகக் காணப்படும் சில சந்தர்ப்பங்களில் அண்ணளவாக 50 % வரையான காரணம் அறியப்படாமலும் போகலாம் என விஞ்ஞான ரீதியான தரவுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நேற்றைய தொடர்ச்சி)

# மெடமுலான வம்சம்:

## டொன் அல்வின் ராஜபக்சவின் நான்கு மகன்மாரும் மூன்று பேரப்பிள்ளைகளும்

**டி.ஏ.ராஜபக்சவின் குணாதிசயங்கள்**

இந்த வகையாக போற்றுதலுக்குரிய நம்பிக்கையையும் விசுவாசத்தையும் டி.ஏ.வெளிக்காட்டியபோதிலும் 1956 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பண்டாரநாயக்க அரசிலோ 1960 ஜூலை அமைச்சரவையிலோ அவருக்கு அமைச்சர் பதவி கிடைக்கவில்லை.

விசுவாசத்தை வெளிக்காட்டிய போதிலும் சுதந்திரக் கட்சிக்குள் அவருக்கு உரிய இடம் நிராகரிக்கப்பட்டது என்றே முதலில் நான் நினைத்தேன். ஆனால், அவருக்கு பதவிகளை பெறுவதில் ஆசை இருக்கவில்லை என்று சாம் விஜேசிங்க மற்றும் புத்திக குருகுலரத்னவிடமிருந்து அறிந்துகொண்டேன். ஏற்கனவே கூறப்பட்டதைப்போன்று டி.ஏ. ராஜபக்சவின் இந்தக் குணாதிசயங்கள் தற்போது அதிகாரத்தின் உச்சியில் இருக்கும் அவரது வழித்தோன்றல்களின் குணாதிசயங்களில் இருந்து முற்றிலும் வேறுபடுகின்றன.



1956 ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க எந்தவொரு அமைச்சரவை பதவியையும் ( சி.பி. டி.சில்வாவுக்கு கொடுக்கவிருந்ததை தவிர) டி.ஏ.யுக்கு வழங்கத் தயாராகவிருந்தார். ஆனால், டி.ஏ.உறுதியாக மறுத்துவிட்டார். ஆனால், அவர் தனது பெறாமகன் லக்ஸ்மனுக்கு (டி. எம்.ராஜபக்சவின் மகன்) மாத்திரம் ஒரு பிரதியமைச்சர் பதவி கொடுக்கப்படவேண்டும் என்று விரும்பினார். அதனால் லக்ஸ்மனுக்கு வர்த்தக, வாணிப பிரதியமைச்சர் பதவி கொர்டுக்கப்பட்டது. அந்தப் பொறுப்புகளுக்கான அமைச்சராக ஆர்.ஜி.சேனநாயக்க இருந்தார். ஆனால், தங்காலை வழக்கறிஞர் விக்கிரமசூரிய த்லைமையில் அம்பாந்தோட்டை மக்கள் பண்டாரநாயக்கவிடமும் டி.ஏ.யிடமும் ஆட்சேபத்தை தெரிவித்தனர். அதனால், சி.பி.டி.சில்வாவின் கீழ் காணி, நீர்ப்பாசன, விவசாய பிரதியமைச்சராக பதவியேற்பதற்கு டி.ஏ.நிர்ப்பந்திக்கப்பட்டார். 1959 செப்ரெம்பர் 26 எஸ்.டபிள்யூ.பண்டாரநாயக்கவின் கொலையை அடுத்து குறுகிய காலமே பதவியில் இருந்த கலாநிதி தஹாநாயக்காவின் அமைச்சரவையின்போது டி.ஏ.ராஜபக்ச விவசாய, காணி அமைச்சராக இருந்தார். கிறுக்குப்பிடித்த தஹாநாயக்கவினால் பதவிநீக்கம் செய்யப்படுவதற்கு முன்கூட்டியே டி.ஏ.இரு வாரங்களில் ஒக்ரோபர் 10 ஆம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்தார். பிரதமர் தஹாநாயக்க பல அமைச்சர்களை ஒரேயடியாக பதவிநீக்கிவிட்டு புதியவர்களை நியமித்துக் கொண்டிருந்த நேரம் அது.


1960 ஜூலையில் சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமரானார். அவர் டி.ஏ. க்கு அமைச்சரவை பதவியொன்றை வழங்க முன்வந்தார். ஆனால் டி.ஏ. ஏற்க மறுத்துவிட்டார். அதையடுத்து அவருக்கு சபாநாயகர் பதவியை கொடுக்க திருமதி பண்டாரநாயக்க முன்வந்தார் .அதையும் அவர் ஏற்கவில்லை. மும்தாஜ் மஹாலை விடவும் மெடமுலானவில் உள்ள தனது வீட்டையே தான் விரும்புவதாக ராஜபக்ச தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. கொழும்பில் இருக்கும்போது சிராவஸ்தியில் இருந்த ஒரு அறையையே அவர் தொடர்ந்து பயன்படுத்தினார். நவம்பர் 6, 1962 நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரான வாரியப்பொல எம்.பி.ஏ.எம்.ஏ.அதிகாரி காலமானதையடுத்து அந்தப் பதவிக்கு டி.ஏ. ராஜபக்ச நியமிக்கப்பட்டார். ஜனவரி 24, 1964 அமைச்சர் பதவியொன்றை ஏற்றுக்கொள்வதற்காக சபாநாயகர் ஆர்.எஸ்.பெல்பொல இராஜினாமா செய்தபோது அன்றைய பிரதி சபாநாயகர் ஹக் பெர்னாண்டோ சபாநாயகரானார். டி.ஏ. ராஜபக்ச பிரதி சபாநாயகரானார். 1964 டிசெம்பரில் சிறிமாவோவின் அரசாங்கம் தோற்கடிக்கப்படும்வரை டி.ஏ. பிரதி சபாநாயகராக பதவியில் இருந்தார். 1965 தேர்தலில் தனது பெலியத்தை தொகுதியில் தோல்வி கண்ட டி.ஏ. ராஜபக்ச நவம்பர் 7, 1967 காலமானார்.

**மஹிந்த ராஜபக்ச**

டி.ஏ. இறந்த பிறகு பெலியத்த தொகுதியின் சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பதவியை திருமதி பண்டார நாயக்க டி.ஏவின் மூத்தமகன் சமல் ராஜபக்சவுக்கு வழங்க முன்வந்தார். அதேவேளை, சாமல் ராஜபக்ச பொலிஸ் சேவையில் ஒரு சப் -இன்ஸ்பெக்டராக இணைந்துவிட்டார். அதனால் அமைப்பாளர் பதவியை ஏற்க மறுத்த அவர் அதை " மல்லி" மஹிந்தவுக்கு கொடுக்குமாறு சிபாரிசு செய்தார். மஹிந்த மிகவும் இளையவர் என்பதால் பொறுப்பில்லாமல் நடந்துகொள்வார் என்று ஆரம்பத்தில் தயங்கிய சிறிமாவோ பிறகு மனம்மாறி 1968 இல் மஹிந்தவுக்கு பெலியத்த தொகுதி சுதந்திர கட்சி அமைப்பாளர் பதவியைக் கொடுத்தார்.

1970 மே பொதுத்தேர்தலில் ஐக்கிய முன்னணி மகத்தான வெற்றிபெற்றது. சுதந்திரக் கட்சிக்கு 91 ஆசனங்கள் கிடைத்தன. சமசமாஜ கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் முறையே 19 ஆசனங்களையும் 6 ஆசனங்களையும் கைப்பற்றின. பேர்சி மஹிந்த ராஜபக்ச தனது போட்டியாளரான ஐ.தே.க.வின் டாக்டர் ரஞ்சித் கே.பி.அத்தபத்துவை தோற்கடித்தார். மஹிந்தவுக்கு 23,103 வாக்குகளும் அத்தபத்துவுக்கு 16,477 வாக்குகளும் கிடைத்தன. 1977 பொதுத்தேர்தலில் நிலைமை மாறியது. அத்தபத்துவுக்கு 24,289 வாக்குகளும் மஹிந்தவுக்கு 17,896 வாக்குகளும் கிடைத்தன. மஹிந்தவின் தந்தையார் டி.ஏ.ராஜபக்சவும் ரஞ்சித்தின் தந்தையார் டி.பி.அத்தபத்துவும் 1947 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு தேர்தலிலும் எதிர்த்து போட்டியிட்டு வந்தவர்கள். தங்களது மகன்மார் பெலியத்த எம்.பி.க்களாக வந்ததை பார்க்க அவர்கள் இருவரும் உயிருடன் இருக்கவில்லை. 1985 இல் மஹிந்தவின் மூத்த சகோதரர் சாமல் ராஜபக்ச முல்கிரிகலை இடைத்தேர்தலில் போட்டியிட்டார். சமலின் தேர்தல் பிரசாரத்தை மஹிந்தவே முன்னின்று நடத்தினார். அப்போது ஒரு துப்பாக்கிப் பிரயோக சம்பவம் இடம்பெற்றது. மஹிந்த கைதுசெய்யப்பட்டு மூன்று மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பிறகு நீதிமன்றம் அவரை குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்தது. மஹிந்த விளக்கமறியலில் இருந்த நாள்களில்தான் அவரது தாயார் காலமானார். தாயாரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்ள அவர் அனுமதிக்கப்படவில்லை.





**குடும்ப அரசியல்**

குடும்ப அரசியல் என்பது இனம், மதம், சாதி எல்லாவற்றையும் கடந்து இலங்கை அரசியல் அரங்கில் பழக்கப்பட்டுப்போன ஒரு அம்சமாகிவிட்டது. இலங்கையின் அரசியல் குடும்பங்களின் பட்டியலை அகரவரிசை ஒழுங்கில் பார்ப்போமேயானால், கிழக்கில் அப்துல் மஜீதுகளில் இருந்து தெற்கில் யாப்பா அபேவர்த்தனாக்கள் வரை இலங்கையில் குடும்ப அரசியலுக்கு இனம் ஒரு தடையல்ல என்பது தெரிய வரும்.

தேர்தல்களில் தேசிய மட்டம், மாகாண மட்டம், பிரதேச மட்டம் என்றுள்ள வேறுபட்ட மட்டங்களில் அரசியல் வம்சங்கள் காணப்படுகின்றன. வெவ்வேறு படிநிலைகளில் இந்த வம்சங்கள் இருக்கின்றன.

பல பிராந்திய மற்றும் உப பிராந்திய அரசியல் குடும்பங்கள் இருக்கின்ற அதேவேளை, இலங்கையில் இதுவரை தேசிய மட்டத்தில் மூன்று பிரதான குடும்புங்களே அரசியலில் ஆதிக்கம் செலுத்திவந்துள்ளன.

முதலாவது குடும்பம் டி.எஸ்.சேனநாயக்க, மகன் டட்லி சேனநாயக்க மற்றும் மருமகன் சேர். ஜோன். கொத்தலாவல ஆகியோரின் " போத்தல வம்சம்". இவர்களுடன் சேர்த்து அகன்ற குடும்பமாக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் குடும்ப உறுப்பினர்களும் அமைந்தார்கள். அடுத்தது எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க, அவரது மனைவி சிறிமாவோ ரத்வத்தை பண்டாரநாயக்க , அவர்களது மகள் சந்திரிகா குமாரதுங்க, மகன் அநுரா பண்டாரநாயக்கவின் " ஹொரகொல்ல" வம்சம். போத்தல, ஹொரகொல்ல இரண்டு வம்சங்களும் 20 ஆம் நூற்றாண்டில் சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை அரசியலில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்துவந்தன.

**மெடமுலான வம்சம்**

ஆனால், 21 ஆம் நூற்றாண்டில் வெளிக்கிளம்பிய மூன்றாவது அரசியல் குடும்பம் ஒரு வம்சத்தை வீழ்த்திவிட்டது. மற்றைய வம்சத்தையும் இல்லாமல் செய்துவிட அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. அந்த மூன்றாவது அரசியல் குடும்பம் தான் டி.ஏ.ராஜபக்சவின் குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கிய மெடமுலான வம்சமாகும். டொன். அல்வின் ராஜபக்சவின் மெடமுலான அரசியல் வம்சம் இலங்கை அரசியலில் நிலைபெறப்போகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இருபத்திரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில் 13 . 06 . 1981

சந்நிதியான் பாதங்களில் 25 . 08 . 1999



## செல்வி திருமகள் கனகசபை

**திதி : பூர்வபக்க சதுர்த்தசி**

இருபதொடு ஈராண்டு ஓடியே போனதம்மா
ஈராறு கண்ணிருந்தும் உனைக் காக்க
தேரேறும் வேலவனின் திருவடியை
- மறந்தானம்மா தொடரவென்று
வேரற்ற மரங்களாக நமை விட்டு எங்கு சென்றாய்

ஆண்டாண்டு காலம் நாம் அழுது புரண்டாலும்
மீண்டிங்கு வரமாட்டாய் என புத்தி சொல்லுதம்மா
மனமென்ற ஓர் குரங்கு புத்தி சொல்ல கேட்கணுமே - ஓர்
கணமாச்சும் உனைக்காண தினம்தினம் ஏங்குதே.

க.மு. 125, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
நி.மு. மீசாலை வடக்கு,
மீசாலை.

உன் நினைவுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 03 . 1971

மறைவு 20 . 08 . 2021



## துரைராசா ரவிச்சந்திரன்

(பிள்ளையார் களஞ்சிய உரிமையாளர் - மானிப்பாய்)

இராஜகாரியர் லேன், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் ஆஸ்பத்திரி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா ரவிச்சந்திரன் நேற்று (20.08.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா மற்றும் மகேஸ்வரியின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் இலட்சுமியின் அன்பு மருமகனும், சுபோதினியின் அன்புக் கணவரும், மதுரகன், றக்ஷிதா, ஆத்மிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், லீலாவதி, அமரர் கிருஸ்ணகுமார், சாந்தகுமாரி, றமேஸ் குமார், ரஞ்சித் குமார் (ஆசிரியர் - நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதர னும், அம்பிகைபாகன் (லண்டன்), கிரிதரன், பகிரதன் (இத்தாலி) தயாபரன் ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.08.2021) வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கோம்பையன் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
T.P.:077 540 0702 மனைவி, பிள்ளைகள்.

# பெயர் மாற்றம்

சங்கானை வீதி, அச்சுவேலி யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **ஆன் அனிசிக்க கௌதமி** ஆகிய நான் எனது பெயரை **ஆன் அனுஷிகா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஆன் அனுஷிகா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**ஆன் அனுஷிகா**


# பெயர் மாற்றம்

4 ஆம் வட்டாரம் முள்ளியவளை முல்லைத்தீவில் வதியும் **அன்னராஜா ஜோய்ஜான்ஸி** ஆகிய நான் எனது பெயரை **அன்னராஜா டனுஜான்ஸி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **அன்னராஜா டனுஜான்ஸி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**அன்னராஜா டனுஜான்ஸி**

# ஒன்பதாம் ஆண்டு நினைவு நாள்

அமரர் **இளையதம்பி அருமைநாதன்** (அருமை)



திதி:- வளர்பிறை சதுர்த்தசி
(21.08.2021)

என்றும் எம்முடன் இருந்து எம்மை
வழிநடத்தும் அப்பாவே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம் அப்பா!

உங்கள் ஆத்ம சாந்திக்கு என்றும்
இறைவனை வேண்டி பிரார்த்திக்கிறோம்
அப்பா.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி

குடும்பத்தினர்

அன்னை மடியில் 06.10.1954

ஆண்டவன் அடியில் 29.08.2012

# மரண அறிவித்தல்



## திருமதி வள்ளிநாயகி நவரத்தினம்

யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டு நல்லூரைப் பிறப்பிடமாகவும் கோண்டவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னை வள்ளிநாயகி நவரத்தினம் தனது 90 ஆவது அகவையில் கடந்த (14.08.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம், செல்லம்மாச்சியின் பாசமான மகளும், காலஞ்சென்ற வட்டுக்கோட்டை விநாயகமூர்த்தி மாரிமுத்து ஆச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு. பண்டிதர் விநாயகமூர்த்தி நவரத்தினத்தின் பாசமான மனைவியும் கலாவதி சுந்தரலிங்கம் (Biomedical Scientist UK) கலைச்செல்வன் (முன்னாள் பிரதிப் பணிப்பாளர் - UDA) கலாபரன் (Planning EngineerUK) கலைவாணி (Senior Finance Officer - UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற கையிலாசபிள்ளை சுந்தரலிங்கம் (Automobile Engineer UK) தனலக்ஷ்மி, கலைச்செல்வன், குகசேனி,கலாபரன் (UK) பரமநாதன் லோகேஸ்வரன் (FCCA, FCMA - UK) என்போரின் மாமியாரும், Dr. சுஜீவா (UK) Dr. கோகுலரமணன் (Phd.UK) கஜானந்தா (Senior Systems and net work Administor - Run Ruwan Groups), கலைப்பிரியா ராஜேஸ்குமார் (KPMG Chartered Accountants - SriLanka) Dr. நிஷாந்தா (விரிவுரையாளர் மிருக வைத்தியபீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்), Dr அபிராமி (UK), ஆரணி (Associate medical Writer - UK) Dr. துவாரகா (UK), Dr. அபிசன் (Eye Surgeon - UK), Dr. ரூபன் (UK), Dr. Verity கோகுலரமணன், Eng.ராஜாராமன் ராஜேஸ்குமார் (Atiti Enterprices India), துதிகா, கஜானந்தா, Dr. லலந்தி வைராஞ்சலி பிறேமசீல Dc சில்வா (விரிவுரையாளர் மிருக வைத்திய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்) பென்சமின் (Project Manager Philips Electorincs UK), Dr. ரிசிகேஷன்(UK), ஆகியோரின் பேர்த்தியும், கீசன் (UK), நிலா (UK), ஓவியா (UK), தக்ஷா (India) ருக்ஷரா (India), கம்சினி, மாருதன், பிருத்விடன்வின், கிரிஷன், ராஜ் (UK) ஆகிய செல்லக் குழந்தைகளின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முறைப்படி அவரது இல்லத்தில் 15.08.2021 நடைபெற்று, திருமேனி கோண்டாவில் இந்து மயானத்தில் அக்கினியுடன் சங்கமமாயிற்று.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
021 221 4823 ந.கலைச்செல்வன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாவசிய அலுவலர்களுக்காக

# யாழ்., கிளிநொச்சி இடையே தினமும் ஒரு இ.போ.ச. பஸ்

யாழ்ப்பாணம், ஓக. 21

அத்தியாவசிய சேவைப்பணியாளர்கள், அரச பணியாளர்களுக்காக யாழ்ப்பாணம் கிளிநொச்சி வழித்தடத்தில் இ.போ.ச. பேருந்து ஒன்று, இன்று தொடக்கம் காலையும், மாலையும் சேவையிலீடுபடும் என்று சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

காலை 7மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்தும் மாலை 4.30மணிக்கு அறிவியல் நகரிலிருந்தும் பேருந்து புறப்படும்.

அத்துடன் அலுவலர்கள் கட்டாயமாக உத்தியோக அடையாள அட்டையை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# சொகுசு பேருந்து, 5 துப்பாக்கிகளை மீட்டது போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு

கொழும்பு, ஓக. 21

டுபாயில் வசிக்கும், 'ஹரக் கட்டா'எனப்படும் நதுன் சிந்தகாவுக்கு சொந்தமான, சுமார் 40 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொகுசு பேருந்தை, போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மாத்தறை மிட்டெனிய பகுதியில் நேற்றுக் கைப்பற்றினர்.

மாத்தறையிலிருந்து கடுவெல செல்லும் அதிவேக நெடுஞ்சாலையில் இந்த சொகுசு பேருந்து பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, வெலிகம, வலான சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், ஐந்து கைத்துப்பாக்கிகளை பொலிஸ் போதைப்பொருள் பணியகம் நேற்றுக்காலை கண்டறிந்து மீட்டது.

சீனாவில் தயாரிக்கப்பட்ட 5 கைத்துப்பாக்கிகள், அவற்றுக்குரிய 10 ரவைகளையே பொலிஸார் மீட்டனர்.

பாகிஸ்தானில் இருந்து போதைப்பொருளுடன் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பல துப்பாக்கிகள் பற்றிய தகவல்களை பொலிஸ் போதைப்பொருள் பணியகம் பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிகளும் பாகிஸ்தானிலிருந்து எடுத்து வரப்பட்டவையே. கிடைத்த தகவலின் படி, தேடுதல் நடவடிக்கையின் போது ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த துப்பாக்கிகளும் 'ஹரக்கட்டா'வுக்கு சொந்தமானவை என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (த-இ)

# கோத்தாவுக்கு ' ஹா..ஹா.ஹா'!




ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நாட்டு மக்களுக்கு நேற்று உரையாற்றியதனை இணையத்தில் பார்வையிட்ட பலரும் 'ஹா..ஹா.ஹா'! என்று குறியீட்டுப் பதிவிட்டுள்ளனர்.

பொதுவாக பிரதமர் உள்ளிட்ட நபர்கள் உரையாற்றும்போது பல்லாயிரக்கணக்கானோர் இணையத்தில் அதைப் பார்வையிடுவர். எனினும், ஜனாதிபதியின் நேற்றைய உரையை ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையானோரே பார்வையிட்டுள்ளனர். அதுமட்டுமன்றி, நாட்டை முடக்க மாட்டேன் என்று முடக்கத்துக்கு முன்னர் கூறிவந்த கருத்துக்களையே நேற்றும் ஜனாதிபதி கூறியிருப்பதால், முடக்கத்துக்கு முன்னரே நேற்றைய உரை ஒளிப்பதிவுசெய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகித்து குறியீட்டுப் பதிவிட்டுள்ளனர்.

# கொரோனா 3ஆவது அலைக்கு காரணம் எதிர்க்கட்சிகளா?

## அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி பதிலடி



கொழும்பு, ஓக. 21

"கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தோல்விகண்டுள்ள ராஜபக்ச அரசு, தனது இயலாமையை மூடிமறைக்கவே வைரஸ் பரவலுக்கு எதிரணிகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களே காரணம் என அறிவிப்பு விடுத்துவருகின்றது." என்று ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுற்பகல் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேற்கண்ட விடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனா வைரஸ் பரவல், கட்டுப்படுத்த முடியாத கட்டத்துக்கு வந்துள்ளது என்பது ஆட்சியாளர்களுக்குத் தெரியும். எனவேதான் இதற்கான பழியை எவர் மீதாவது திணித்துவிட்டு தப்பித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன்பிரகாரமே வேலைநிறுத்தப்போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களே வைரஸ் பரவலுக்கு காரணம் எனவும், சுமார் 30 லட்சம் பேர்வரை வீதிகளில் இறக்கப்பட்டனர் எனவும் ஆளுந்தரப்பால் தகவல் வெளியிடப்படுகின்றது.

ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் 99வீதமான ஆசிரியர்கள் பங்கேற்றனர். ஆசிரியர்களில் 85 வீதமானோர் கோத்தாபய ராஜபக்சவுக்கே வாக்களித்தனர். எனவே, எதற்காக ஆசிரியர்கள் போராடுகின்றனர் என்பது தொடர்பில் அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாம் நாட்டை ஆளவில்லை. ஆனாலும் நாம்தான் ஆட்சியாளர்கள் என நினைத்துக்கொண்டே ஆளுந்தரப்பில் இருந்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. என்றார். (த-44)

## சாவைக்....

னாச் சாவுகளின் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரிக்கின்றது.

இந்தநிலையில், கொரோனா சாவுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே அரசின் பிரதான இலக்கு" என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியையும் போட்டுக்கொண்டு இலங்கையிலிருந்து எந்தவொரு நாட்டுக்கும் செல்ல முடியும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கூறினார் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார்.

எனினும், ஒருசில நாடுகள் அறிவிக்கின்ற தடுப்பூசியைப் போட்டுக் கொண்டு சென்றால் தனிமைப்படுத்தப்படாமல் நேரடியாக அந்த நாடுகளுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

**காணி விற்பனை**

மட்டுவில் கிழக்குப் பகுதியில்
பொற்கொல்லர் வீதியில்
6 பரப்புக்காணியில் அமைந்துள்ள
இரு வீடுகள் விற்பனைக்குண்டு.

076 696 4669, 077 456 6069

# கரட் துவையல்



### தேவையான பொருள்கள்

- கரட் துருவல் - 1 கப்
- கடலைப்பருப்பு - 1 டேபிள்ஸ்பூன்
- உளுத்தம்பருப்பு - 1 டேபிள்ஸ்பூன்
- காய்ந்தமிளகாய் - 4
- புளி - பாக்கு அளவு
- பெருங்காயத்தூள் - 1 சிட்டிகை
- உப்பு, எண்ணெய் - தேவைக்கு
- நறுக்கிய இஞ்சி - சிறிது.

### செய்முறை

சட்டியில் எண்ணெயை காயவைத்து கடலைப்பருப்பு, உழுத்தம்பருப்பு, காய்ந்தமிளகாய், பெருங்காயத்தூள் சேர்த்து வறுத்து கரட் துருவல், இஞ்சி, புளி சேர்த்து வதக்கி இறக்கவும்.

ஆறியதும் [illegible] சேர்த்து அரைத்து இட்லி, தோசை, சப்பாத்தி, சாதத்துடன் கலந்து பரிமாறவும்.

சத்தான கரட் துவையல் ரெடி.

ஈர விழிகளுடன்
6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 03 . 1946
மறைவு 21 . 08 . 2015

பெஞ்சமின் குணநாயகம்

வாழ்வில் உம்மை நேசித்தோம்
மரணத்திலும் உம்மை மறவோம்
உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

152/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்**: திருமணம் தள்ளிப்போன வர்களுக்கு நேரம் கூடிவரும். உங்க ளின் புத்திசாலித்தனம் பணியிடத்தில் பாராட்டுப் பெற்றுத் தரும். சமீபத்தில் ஏற் பட்டிருந்த வீண் பிரச்சினைகள் தீரும்.

**இடபம்**: மறைந்துள்ள திறமைகள் வெளிப்பட்டு பாராட்டை பெற்றுத் தரும். வயிறு சம்மந்தப்பட்ட பிரச்னைகள் தீர்ந்து நிம்மதி வரும். குழந்தைகளின் நடவடிக்கையில் நல்ல மாற்றம் வரும்..

**மிதுனம்**: உணவுவிஷயத்தில்கவனமாக இருக்க வேண்டும். தொழில் மூலம் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். வெளியூர் தொடர்புகள் வரும். பொறுமை தேவை.

**கடகம்**: தற்காலிக பணியில் உள்ளோ ருக்கு பணவரவு சுமாராக இருக்கும். மனக்கவலை நீங்கும். இன்று வரும் செய்திகள் நிம்மதி தரும். மூத்தவர் துணையுடன் நல்ல செயல்களைச் செய்வீர்கள்.

**சிம்மம்**: பாராட்டுப் பெறுவீர்கள். வீண் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். யாருக்காகவும் யாரிடமும் பரிந்துரைக்க வேண்டாம். பொறுமை தேவை. கடன் வாங்காதீர்கள்.

**கன்னி**: அதிகாரியின் கட்டளையை ஏற்று நடப்பது நல்லது. பெரிய மனி தர்களின் நட்பைத் தவறாகப் பயன்ப டுத்த வேண்டாம். புதிய இடத்துக்கு மாறுவது பற்றி யோசியுங்கள்.

**துலாம்**: பணத்தைச் சேமிப்பதில் சிறு சிறு சிரமங்கள் ஏற்படக்கூடும். தியாகம் செய்து உற்றவர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். வீடு வாங்குவதில் இருந்த சிக்கல்கள் அனைத்தும் தீரும்.

**விருச்சிகம்**: பொதுவாக யாரிடமும் வளைந்து கொடுத்து போவது நல்லது. உங்களால் பயனடைந்த ஒரு நண்பர் நன்மை செய்வார். இன்று சாதனை நாளாக அமையும்.

**தனுசு**: பிள்ளைகளின் தலையீட்டால் குடும்பத்தில் நிலவிய பிரச்சினை தீரும். மகிழ்ச்சியும் நற்செய்தியும் உண்டு. எதிரிகளைச் சமாளிப்பீர்கள். சுபநிகழ்ச்சி கள் நிகழும்.

**மகரம்**: உடல்நலப் பிரச்சினைக்கு மருத்துவரிடம் செல்வது நல்லது. வயிற்று உபாதைகள் ஏற்பட்டு உடனே சரியாகும். பிள்ளைகள், வாழ்க்கைத் துணைவரால் நலம் உண்டாகும்.

**கும்பம்**: அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். பணியா ளர்கள் இன்று எச்சரிக்கையுடன் செயற் படுவது நல்லது.

**மீனம்**: வருமானம் திருப்தி தராது. உல்லா சங்களில் ஈடுபடுவீர்கள். நண்பர் களும், உறவினர்களும் உதவி செய் வார்கள். புகழ்சேரும். உழைப்புக்கேற்ற ஊதியமும் பாராட்டும் வரும்.




# ஓடிடியில் வெளியாகும் 'சாணிக்காயிதம்'

'சாணிக்காயிதம்' படத்தில் முதன்முறையாக ஹீரோவாக அறிமுகமாகி றார் செல்வராகவன். இப்படத்தில், செல்வராகவனுக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடிக்கிறார்.

தேசிய விருதை வென்ற 'ஆரண்ய காண்டம்' படத்தில் உதவி இயக்கு நரான அருண் மாதேஸ்வரன் 'சாணிக்காயிதம்' படத்தை இயக்குகிறார். இந்த நிலையில், இரண்டு நாள்களுக்கு முன்பு முழு படப்பிடிப்பும் நிறை வடைந்த நிலையில், 'சாணிக்காயிதம்' படம் நேரடியாக அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியாகவிருக்கிறது என்று தகவல்கள் வெளியாகி யுள்ளது.

தற்போது, இறுதிக்கட்டப் பேச்சு நடைபெற்று வருவதாகவும், விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

# எம்மை நேசிப்போம்



ஒவ்வொரு மனிதனுமே ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தவன்தான். மனிதர்களுக்குள் அவன் உயர்ந்தவன்| இவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடே கிடையாது. தற்போதைய காலகட்டத்தில் இந்த வேறுபாடுகளுக்கெல்லாம் இடமே இல்லை என்றாகிவிட்டது. ஒரு மனிதனுக்கு பதில் இன்னொரு மனிதன்| இவனைவிட இவன் தகுதியானவன் என்ற பேச்சுக்கே வழியில்லை. எல்லோ ருமே அவர்களின் தனித்தனி வழியில் பெறுமதியானவர்களே. அழகான ஒரு பொருளையோ அல்லது உருவத்தில் அழகான ஒருவரையோ பார்க்கும்போது எவ்வளவு ரசிக்கிறோம்| எவ்வளவு பாராட்டுகிறோம்...! அட எவ்வளவு அழகு என்று சில வேளை களில் மனதுக்குள் பொறாமைப்படுவதும் உண்டு.

பிறரை இவ்வளவு நேசிக்கும், வர்ணிக்கும் நாம், 'நாமும் அழகு தானே' என என்றேனும் யோசித்திருக்கிறோமா? கண்ணாடி முன் நின்று நம்மை நாமே ரசித்திருக் கிறோமா? நிச்சயமாக இல்லை. ஏனென் றால், தன்னைத்தானே ரசித்துக்கொள்ள, பாராட்டிக்கொள்ள, நேசிக்க யாருக்கும் நேரமும் இல்லை. யாரும் இதைப்பற்றி சிந்தித்திருக்கவும் மாட்டார்கள். முதலில் எம்மை நாம் நேசித்தால்தானே பிறர் எம்மை நேசிப்பார்கள். பிறரை நேசிக்கத் தெரிந்த எமக்கு, எம்மையே நேசிக்கத் தெரி யவில்லை. அதுதான் பிரச்சினை. உருவத் திலும் சரி, எமக்கு இருப்பதான திறமை களிலும் சரி, என்ன குறையாக இருக்கிறது என்பதைப் பார்ப்பதை விட்டுவிட்டு, எம்மில் எது நிறைவாக இருக்கிறது என்று பார்க்கத் தொடங்கிவிட்டாலே போதும்.

'நான் நன்றாக இருக்கிறேன்... என்னால் முடியாதது என்று எதுவுமில்லை' என்று நாம் சிந்திக்க ஆரம்பித்துவிட்டாலே ஒரு புத்துணர்ச்சியும் தன்னம்பிக்கையும் ஏற்பட் டுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலிபான் ட்ராஃபிக் போலீஸ்...

நான் கூட நம்ம ஊர் குடுகுடுப்பைகாரனோனு நினைச்சேன்..!



Selva Bharathi@

அழகான ஒன்றை அழகாகக் காட்டுவதல்ல, அழகற்ற ஒன்றை அழகாகக் காட்டுவதே சிறந்த புகைப்படக் கலை.

அபு கத்திஜா@

தற்கால ஆசைக்காக.!!

பிற்கால பேரழிவை சிந்திக்க மறக்காதே..!!






## ஒரேநாளில்...

நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார். இதுவே இதுவரை ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா காவுகளின் எண்ணிக்கையாகும்.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 985 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 195 பேரில் 98 ஆண்களும், 97 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதில் 25 ஆண்கள், 18 பெண்கள் என 43 பேர் 30 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 151 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 72 ஆண்களும், 79 பெண்களும் அடங்குகின்றனர். (கு-22)


# இனிய நினைவுகளுடன் ஒன்பதாம் ஆண்டு



யாழ் நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்டிருந்த

அமரர் திருமதி
**யோகமலர் (மம்மி) இரத்தினசிங்கம்**
அவர்களின் ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 31-10-1947 விண்ணில் 30-08-2012
திதி : சதுர்த்தசி [21.08.2021]

எங்கள் அன்புத் தாயே மம்மி
எம்மை பெற்று வளர்த்து
அன்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
பல இன்னல்களை கடந்து எம்மை
வளர்த்து வாழவைத்த எம் மம்மியே

உதிரத்தின் உயிர்தந்து
உதிரத்தை பகிர்ந்தளித்தீர்
உதட்டோர புன்னகையால்
இன்முகம் மலர்ந்திடுவீர்

அன்பான மொழி பேசி
உறவுகளை அரவணைத்தீர்
அம்மா என்ற சொல்லுக்கு
அர்த்தமாய் வாழ்ந்திட்டீர்

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
அன்போடு எமை ஆழ்வாய்
என்றென்றும் எழிலோடு — எம்
நெஞ்சினிலே நீ வாழ்வாய்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை சனிக்கிழமை 21.08.2021 அன்று அன்னாரின் லண்டன் இல்லத்தில் நடைபெறுகின்றது.

கணவன் : 077 754 8710 (இலங்கை)
மகன் : 07711984055 (லண்டன்)

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

தாய் மடியில் 24 02 1953



சிவன் அடியில் 19 08 2021

**அமரர். திருமதி. ஸ்ரீரங்கநாதன் திலகவதி**

அளவெட்டி மேற்கு விசவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.ஸ்ரீரங்கநாதன் திலகவதி 19.08.2021 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் திரு. ஸ்ரீரங்கநாதன் (ஓய்வுபெற்ற பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைராஜா நாகம்மா தம்பதிகளின் அன்புமகளும் சுந்தரசபேசன் (சுழிபுரம்), காலஞ்சென்ற சிவரூபவதி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற தயாளன் (நெதர்லாந்து) ஆகியோரின் சகோதரியும் ஸ்ரீறஜனி (மலேஷியா), ஸ்ரீவரதன் (Director-SS Universe Feathers Private Limited, CTS Academy Colombo) ஆகியேரின் அன்புத் தாயாரும். உதயராசாவின் மாமியாரும் திவியன்னின் அம்மம்மாவுமாவார்.

அன்னாரின் தகனக்கிரிகைகள். 20.08.2021 வெள்ளிக்கிழமை அன்று கோம்பயன் இந்து மயானத்தில் இடம்பெற்றது என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
075 527 0282
077 929 8840



# நினைவஞ்சலிகள்

## 33ஆம் ஆண்டு

மலர்வு 27 • 01 • 1912



உதிர்வு 22 • 01 • 1988

**நிற்சிங்கம் சிதம்பரப்பிள்ளை**
திதி: தை வளர்பிறை ஷஷ்டி

ஐயா! நீங்கள் சென்று ஆனதே
தையொடு ஆண்டுகள் முப்பத்துமூன்று
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வானகம் சென்றீர்களே!

காவலனாய் கவிஞனாய் - நல்லாசானய்
கதைகள் பல சொல்லி
கனிவுடனே எமைக் காத்திட்டீர்கள்
காலங்கள் உருண்டோடி - ஆனதே
தையொடு முப்பத்து மூன்று ஆண்டுகள்
வையகத்தில் நாம் இங்கு வணங்குகிறோம் தினமும்
ஐயா!
பொய்யான உடலை விட்டு
பூவுலகம் சென்று விட்டீர்
மெய் ஞானமாகி மிளர்கின்ற
மெய் சுடரே!
அம்மாவும் நீங்களுமாய் எமை ஆசிர்வதிப்பீர்கள்
போற்றி ஐயா! போற்றி! போற்றி! போற்றி!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு

மலர்வு 15 • 11 • 1932



உதிர்வு 31 • 08 • 2020

**சிதம்பரப்பிள்ளை தங்கம்மா**
திதி: ஆவணி வளர்பிறை சதுர்த்தசி

ஆண்டொன்று ஆனதம்மா
ஆறவில்லை எம்துயரம்
மீண்டு என்று மேனியில் வந்து பிறப்பீர்கள் அம்மா
வேண்டுகின்றோம் நாங்கள் இங்கு
வேதனையில் வாடுகின்றோம்!
கூண்டை விட்டு கிளி பறந்தால்
கூண்டுக்கே வந்து விடும் - உங்கள்
கூண்டு இங்கே இல்லையம்மா ! வேண்டுகின்றோம்
மீண்டும் வந்து பிறந்திடுங்கள்!
காத்திருப்போம் உங்களுக்காய்
கடவுளை நாம் வேண்டுகின்றோம்!
தாயே போற்றி! உங்கள் தாள்பணிந்து
வணங்குகின்றோம்!
மாய உலகத்தில் மண்டியிட்டு
வணங்குகிறோம் !
தூய உங்கள் பாதத்தில் தூவுகின்றோம்
பூக்களை ! நாம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆங்கிலம் கற்போம்

- read - வாசித்தல்
- speak - பேசுதல்
- sing - பாடுதல்
- walk - நடத்தல்
- climb - ஏறுதல்
- run - ஓடுதல்

- happy - சந்தோசம்
- poor - ஏழை
- hard - கடினமான
- high - உயர்
- work - வேலை
- kind - கனிவான
- nature - இயற்கை

- new - புதிய
- male - ஆண்
- female - பெண்
- fool - முட்டாள்
- free - இலவசம்
- future - எதிர்காலம்
- general - பொது

- anger - கோபம்
- automatic - தன்னியக்க
- bad - கெட்ட
- good - நல்ல
- beautiful - அழகான
- bent - வளைந்த
- bitter - கசப்பான

- broken - உடைந்த
- cheap - மலிவு
- chemical - இரசாயன
- clean - சுத்தமான
- clear - தெளிவான
- cold - குளிர்

- common - பொதுவான
- complete - முழுமை
- cruel - கொடூரமான
- cut - வெட்டு
- dark - இருண்ட
- dead - இறந்த
- deep - ஆழமான



# நிதானத்தை கடைப்பிடிப்போம்

வேட்டைக்குப் போன அரசன் ஒரு காட்டுக்குள் தனியாக வந்து சிக்கிக் கொண்டான்...அரசனை பல்லக்கில் வைத்துக்கொண்டு அவனது நாட்டுக்கு கொண்டு போய் சேர்க்க அங்கே இருந்த காட்டுவாசிகள் நான்கு பேர் ஒப்புக் கொண்டார்கள்... அவர்களிடம் பேசிய போது நாட்டுக்கு போய் சேர ஆறு நாள்களாகும் என்று அறிந்து கொண்டான்...!

அரசனுக்கோ வெகு விரைவாக நாட்டுக்கு திரும்ப வேண்டும் என்ற விருப்பம்.. எனவே அரசன் அவர்களிடம் “என்னை மூன்று நாள்களில் கொண்டு போய் சேர்த்தால் மூவாயிரம் பொற்காசுகள் தருகிறேன்...!! இரண்டே நாள்களில் கொண்டு போய் சேர்த்தால் 5000 பொற்காசுகள் தருகிறேன்..” என்றான்..

பல்லக்கு சுமந்த காட்டு வாசிகள் பொன்னுக்கு ஆசைப்பட்டு வேகத்தை கூட்டிக் கொண்டே போனார்கள்.. ஆனால் நடந்ததோ வேறு..

ஆறு நாள்கள் கழிந்தும் காட்டுக்குள்ளேயே சுற்றிக் கொண்டு இருந்தார்கள். ஒரு கட்டத்தில் சோர்ந்து போய் பல்லக்கை கீழே இறக்கி வைத்து விட்டார்கள்...

அரசனுக்கு கோபம்... ஆனால் அவர்கள்... “மன்னிக்க வேண்டும் மன்னா... வேகத்திலேயே கவனத்தை வைத்ததால் வழியை தவற விட்டு விட்டோம்....” என்று வேதனையுடன் கூறினார்கள்... இப்படித் தான் .. நம்மில் பலரும் வாழ்க்கையில் பணத்தை எட்டிப் பிடிக்க ஆசைப்பட்டு நல்ல வழியை தவற விட்டுவிடுகிறோம்.


## திருக்குறள்

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு**


அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ் விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும்.

## சரியான பகுதியை தெரிவு செய்வோம்







# டைட்டானிக்

ஆர்எம்எஸ் டைட்டானிக் (RMS Titanic) என்பது ஓர் ஆடம்பர பயணிகள் கப்பல் ஆகும். இது வட அயர்லாந்தில் பெல்பாஸ்ட் நகரில் உருவானது. 1912 இல் முதன் முதலாகச் சேவைக்கு விடப்பட்டபோது இதுவே உலகின் மிகப் பெரிய பயணிகள் நீராவிக் கப்பலாகும்.

டைட்டானிக் கடலில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த ஆயிரத்து 503 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு அமைதிக்காலத்தில் நட்ந்த மிகப்பெரும் கடல் அழிவாகக் கருதப்பட்டது.

டைட்டானிக் கப்பல் அக்காலத்தில் மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கொண்டு கட்டப்பட்டதாகவும் அது மூழ்கவே முடியாததெனவும் கருதப்பட்டது. இப்படியான ஒரு கப்பல் மூழ்கியது உலகெங்கும் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியது.

கப்பலின் சேதமடைந்த பகுதிகளை செப்டம்பர் 1, 1985 இல் றொபேர்ட் பலார்ட் தலைமையிலான ஆய்வாளர் குழு ஒன்று கண்டு பிடித்தது. டைட்டானிக் கப்பல் இப்போது கடல் மட்டத்திலிருந்து 12,000 அடி ஆழத்தில் இருக்கின்றது. இவ்வாழத்தின் நீரின் அழுத்தம் ஒரு சதுர அங்குலத்திற்கு 6000 இறாத்தல் (2700 kg) ஆக உள்ளது.

டைட்டானிக் தனது முதற் பயணத்தை இங்கிலாந்தின் சௌதாம்ப்டன் துறைமுகத்தில் இருந்து நியூயோர்க் நகரை நோக்கி புதன்கிழமை, ஏப்ரல் 10, 1912 இல் கப்டன் எட்வர்ட் சுமித் தலைமையில் தொடங்கியது. புறப்படும் போது டைட்டானிக்கின் உந்திகளின் தாக்கம் அருகிலிருந்த நியூயோர்க் என்ற கப்பலை நகர்த்தி டைட்டானிக்குக்கு மிக அருகில் செல்ல வைத்தது. இதனால் அது ஒரு மணி நேரம் தாமதித்தே புறப்பட்டது.

ஆங்கிலக் கால்வாயைத் தாண்டியதும் பிரான்சில் சேர்பூர்க்கில் நிறுத்தப்பட்டு கூடுதல் பயணிகள் ஏற்றப்பட்டனர். மீண்டும் அடுத்த நாள் அயர்லாந்து, குயீன்ஸ்டவுன் என்ற இடத்தில் நிறுத்தப்பட்டு நியூயோர்க்கை நோக்கி 2,240 பயணிகளுடன் செல்லத் தொடங்கியது. ஞாயிற்றுக்கிழமை, ஏப்ரல் 14 இல் வெப்பநிலை குறைந்து கிட்டத்தட்ட உறைநிலையை அடைந்தது. கடல் மிகவும் அமைதியாக இருந்தது. 1:45 மணிக்கு அமெரிக்கா என்ற கப்பலில் இருந்து டைட்டானிக்குக்கு வழியில் பனிப்பாறைகள் உள்ளதாக செய்தி அனுப்பப்பட்டது. ஆனாலும் இச்செய்தி டைட்டானிக்கை அடையவில்லை. இரவு 11:40 மணிக்கு பெரும் பனிப்பாறை ஒன்றுடன் டைட்டானிக் மோதியது. கப்பலை மோதாமல் திருப்பும் முயற்சி நிறைவேறவில்லை. கப்பல் முற்றாக நிறுத்தப்பட்டது. கப்பலில் மொத்தம் 20 உயிர் காப்பு படகுகள் இருந்தன. முதலாவது படகு காலை 12:40க்கு இறக்கப்பட்டது. முதலாம் இரண்டாம் வகுப்புப் பயணிகளுக்கு படகுகளில் ஏறுவது சுலபமாக இருந்தது. ஆனால் மூன்றாம் வகுப்புப் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. கப்பலில் இருந்து ஆபத்து அறிவிக்கைகள் பல திசைகளிலும் அனுப்பப்பட்டன.

அண்மையில் இருந்த சில கப்பல்கள் செய்திகள் அனுப்பின. ஆனாலும் அவை எதுவும் டைட்டானிக்குக்கு அருகில் வருவதற்கு நேரம் போதவில்லை. சரியாக அதிகாலை 2:20 மணிக்கு கப்பல் முற்றாக மூழ்கியது.

## வர்ணம் தீட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 நாள்களுக்கு...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்ற கொரோனா ஒழிப்பு செயலணிக்கூட்டத்தின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஊரடங்கு உத்தரவு நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோர், கடமைகளுக்கு செல்லும்போது விசேட அனுமதிப் பத்திரம் எதுவும் விநியோகிக்கப்படாது. எனினும், தமது பணிகளுக்கு செல்வதற்கான அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சோதனைச் சாவடிகளில் காண்பித்து, பணிக்குச் செல்ல முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், விவசாயம், ஆடைக் கைத்தொழில் ஆகியவற்றை எவ்வித இடையூறுமின்றி முன்னெடுக்க முடியும் எனவும், மருந்தகங்கள் திறந்திருக்கும், மருந்து தயாரிப்பு மற்றும் விநியோகத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் செப்ரெம்பர் முதலாம் திகதிக்குள் தடுப்பூசி ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இராணுவத்தின் பங்களிப்புடன் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக நாட்டை குறைந்த பட்சம் இரு வாரங்களுக்காவது முடக்குமாறு பல தரப்பினரும் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-44)

## இந்த முறை...

கும்." என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர நேற்று தெரிவித்தார். தனிமைப்படுத்தல் ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இந்தமுறையும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுமா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"5 ஆயிரம் ரூபா வழங்கக்கூடிய சூழ்நிலை தற்போது இல்லை. 2 ஆயிரம் ரூபாவரையே வழங்கக்கூடியதாக இருக்கும். கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நாட்டை முடக்கினால் தான் தொற்றிலிருந்து விடுபடலாம் என்ற சூழ்நிலை ஏற்பட்டதாலேயே நாட்டை முடக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, நெருக்கடி நிலைமையை நாம் தாங்கிக்கொள்ள வேண்டும். " என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். அதேவேளை, தமது கட்சியிலுள்ள 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆயிரத்துக்கு மேற்பட்ட உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் சம்பளத்திலிருந்து ஒரு தொகை பணத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்குவதற்கும், இதற்காக நிதியமொன்றை உருவாக்குவதற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது என்று மேலும் தெரிவித்தார். (த-44)

## தவறான...

சம்பவம் யாழ்.சங்கானையில் நேற்று இடம்பெற்றது.

அதே பகுதியைச் சேர்ந்த சோபிகா என்ற 15 வயதுச் சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த சிறுமி தனது வீட்டில், நேற்று மாலை தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார் என்பது பரிசோதனையில் தெரிய வந்தது.

சடலம் சங்கானை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த சிறுமியின் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் கடந்த 6 மாதங்களுக்குள் வெவ்வேறு காலப்பகுதியில் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளனர். இந்தநிலையில், மேற்குறித்த சிறுமியும் நேற்றுத் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

ஒரே குடும்பத்தில் அடுத்தடுத்து இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்று அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் கிராமமட்ட அமைப்புகள் மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவினர் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது விடயத்தில் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவினர் கவனம்செலுத்த வேண்டும் என்று அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர். (த-319)

## கொரோனாவால்...

றுவந்த மீசாலை வடக்கைச் சேர்ந்த 48 வயதுடைய ஆண் ஒருவரும் கோப்பாய் வடக்கைச்சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 நோய்த்தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 194ஆக உயர்வடைந்துள்ளது. (த-26)

## வவுனியாவிலும்...

கும் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

வவுனியா மதகுவைத்தகுளம் கொரோனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நேரியகுளம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் கொவிட் தொற்று நோயால் நேற்று உயிரிழந்தார்.

இதேவேளை, குருமன்காடு பகுதியில், திடீரென மயங்கிய 35 வயதான பெண் ஒருவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதேவேளை, மகாரம்பைக் குளம் பகுதியில் கிணற்றில் வீழ்ந்த பெண்ணொருவர் மீட்கப்பட்ட மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். சம்பவத்தில் யசிந்தா (வயது 28) என்பவரே உயிரிழந்தார். அந்தப் பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் நான்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் மற்றும் தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கும் எழுமாறாகவும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 150 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. (த-110)

## டெல்டாவின்...

பட்டுள்ளமை இதுவே முதல் முறை என்று கூறப்படுகின்றது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக தொற்று நோய் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

## சர்வதேச...

யின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, விளம்பர பலகை விவகாரம் விவாதிக்கப்பட்டதால், திட்டமிட்டபடி ஏனைய விடயங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படவில்லை.

இதையடுத்து, அந்த விடயங்களை விவாதிக்க மேலதிக நாள் ஒதுக்கப்பட்டு நேற்று மாநகரசபை அமர்வு நடைபெற்றது.

இதன்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அதிருப்தியாளர் அணியான மணிவண்ணன் தரப்பை சேர்ந்த வி.பார்த்தீபன் குறித்த தீர்மானத்தை சபையில் முன்வைத்தார்.

"இலங்கையில் இடம்பெற்ற போரின் போது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையின் மூலம், அல்லது விசேட குற்றவியல் தீர்ப்பாயத்தின் மூலம் நீதி வழங்கப்பட வேண்டும். இந்த தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டும்" என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ராகிணி முன்மொழிய, இதே கட்சியைச் சேர்ந்த வித்தியானந்தன் வழிமொழிந்தார். அதனையடுத்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (த-இ)

## 168 கிலோ...

கடத்திவந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவரை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

தொண்டைமானாறு கடற்பரப்பில் நேற்று அதிகாலை இந்த கடத்தல் முறியடிக்கப்பட்டது என்று கடற்படை தெரிவித்தது. செம்பியன்பற்று பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரும் சிலாவத்துறையைச் சேர்ந்த 20 மற்றும் 28 வயதுடைய இருவருமே கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயன்படுத்திய செம்பியன்பற்றைச் சேர்ந்த ஒருவருடைய படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவர்களிடம் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா போதைப்பொருளின் பெறுமதி 34 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று கடற்படையினர் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும், சட்டநடவடிக்கைக்காக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று கடற்படை மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-26,6)

## அராஜக...

விளங்கிக்கொள்ள வேண்டும். இது, வேலைநிறுத்தம், போராட்டங்களுக்கான காலம் அல்ல. எனவே நாட்டை அராஜக நிலைமைக்குக் கொண்டுவரத் தயாராகாதீர்கள்.

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு நேற்றிரவு ஆற்றிய விசேட உரையின் போதே மேற்கண்டவாறு தெரிவித்ததார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை மீண்டும் ஒரு முறை முற்றாக முடக்கினால், பெரும் பொருளாதாரப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கும். அது, இந்த நாடு பொறுத்துக்கொள்ளக் கூடிய சூழ்நிலை அல்ல. இனிவரும் நாள்களில், இந்தநாட்டை நீண்ட காலத்துக்கு மூடி வைக்க வேண்டிய நிலைமை ஏற்படுமாயின், நாட்டிலுள்ள அனைவரும், மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்குத் தயாராக வேண்டும்.

இந்தமாதம் 19ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள், ஒரு கோடியே இருபது லட்சத்து பத்தொன்பது ஆயிரத்து நூற்று தொண்ணூற்று மூன்று பேருக்கு, முதலாவது அலகு தடுப்பூசியை வழங்கியுள்ளோம்.

அதேவேளை, ஐம்பத்து ஒரு லட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று எண்பத்தைந்து பேருக்கு, இரண்டாம் அலகுத் தடுப்பூசியை வழங்கியுள்ளோம். தவிர, இரண்டாம் அலகுத் தடுப்பூசியை வழங்குவதற்காக, மேலும் சுமார் மூன்று மில்லியன் தடுப்பூசிகள், கைவசம் எம்மிடம் இருக்கின்றன. இன்னும் மேலதிகமாக மூன்று மில்லியன் தடுப்பூசிகள், இந்தமாத இறுதியில் கிடைக்கவுள்ளன.

இதுவரையில், 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 98 சதவீதமானோருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதோடு, அவர்களில் 43 சதவீதமானோருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குள், 81 சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு, இரண்டாம் கட்டத் தடுப்பூசியை வழங்குவதற்கான இயலுமையும் உள்ளது. செப்ரெம்பர் 10 ஆம் திகதிக்குள், 100 சதவீதமானோருக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசியை வழங்க முடியும். அந்த நிலைமையுடன், தொற்றுக்குள்ளாகும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதனால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் குறைவடையும். - என்று குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஜனாதிபதியின் உரை, வழமைபோன்று கடந்தகால தரவுகளை எடுத்துக்கூறுவதாகவே அமைந்துள்ளது. கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான மாற்று வழிகள் குறித்துக் குறிப்பிடப்படவில்லை. தவிர, அத்தியாவசிய தேவைகளான பால்மா, சீனி, பருப்பு மற்றும் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் குறித்து ஜனாதிபதி எதுவும் கூறவில்லை என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (த)

## தொற்று...

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 81 ஆயிரத்து 812 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 96 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்த வர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 20 ஆயிரத்து 810 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணியைக் காப்பாற்ற வருவாரா ஸ்ரோக்ஸ்?

*முடிவு அவரிடமே என்கிறார் இங்கிலாந்துப் பயிற்சியாளர்*



**லண்டன், ஓக. 21**

**இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரரான ஸ்ரோக்ஸ், இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடுவாரா என்பது பெரும் கேள்வியாகியுள்ளது. இந்த நிலையில், இதற்குப் பதில் வழங்கியுள்ள இங்கிலாந்துப் பயிற்சியாளர், வருவதும் ஓய்விலிருப்பதும் ஸ்ரோக்ஸின் முடிவு. ஆனால், நாங்கள் அவரை நிர்ப்பந்திக்க மாட்டோம் என்றார்.**

இது தொடர்பில் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் மேலும் தெரிவிக்கையில்,

அணிக்குத் திரும்புவது தொடர்பாக பென் ஸ்ரோக்ஸுக்கு எந்த அழுத்தமும் இல்லை. அவர் தயாராக இருக்கிறார் என்பதை எனக்கு தெரியப்படுத்த அவர் என்னிடம் வருவார். அதுவரை காத்திருப்போம். அதற்கு கால வரம்பு எதுவும் இல்லை. பென் ஸ்ரோக்ஸும், அவரது குடும்பத்தினரும் மீண்டு வருவதுதான் முக்கியம். அவர் மீண்டும் அணிக்கு வரும்போது வலுவாகத் திரும்புவார். இங்கிலாந்துக்காக அவர் மீண்டும் செயற்படத் தயாராக இருக்கிறார் என்பதை நாம் அறிவோம். நான் நிச்சயமாக பென் ஸ்ரோக்ஸை பதில் அளிக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கமாட்டேன். அது சரியான விஷயமாக இருக்கும் என்று நான் நினைக்க வில்லை. அவர் முழுவீச்சில் அணிக்கு வரத் தயாராக இருக்கும்போது நாங்கள் அவரை இரு கைகளாலும் வரவேற்போம். அதுவரை அவருக்கு தேவையான அனைத்து ஆதரவும் கிடைக்கும் என்றார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இடம்பிடித்திருந்த ஸ்ரோக்ஸ், மனதளவில் பலவீனமாக இருப்பதாகத் தெரிவித்து தொடரில் இருந்து விலகினார். ஸ்ரோக்ஸின் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட சில சம்பவங்களும் அவர் இந்த முடிவு எடுப்பதற்குக் காரணமாக இருந்தது.

ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் இந்தியா 1:0 என்று தற்போது முன்னிலையில் உள்ளதால், ஸ்ரோக்ஸின் வருகை குறித்து எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# பன்ட், ஸ்ரேயாஸ் தலைவராக யார்?

## குழப்பத்தில் டில்லி

புதுடில்லி, ஓக. 21

ஐ.பி.எல் தொடரில் இரண்டாவது பாதி விரைவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், டில்லி கேப்பிட்டல்ஸின் தலைவர் யார்? என்பது தொடர்பில் பெரும் குழப்பம் நிலவுகின்றது.

காயம் காரணமாக ஐ.பி.எல். தொடரின் முதல் பாதியில் அணியிலிருந்து விலகிய ஸ்ரேயாஸ் அய்யர் தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில்தான் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். இந்த சீசனின் இரண்டாம் பாதிக்கு, ஸ்ரேயாஸ் அய்யர் தலைமைப் பொறுப்பு ஏற்பாரா அல்லது ரிஷப் தலைவராகத் தொடர்வாரா என்பது தொடர்பில் எந்தத் தெளிவூட்டலும் இன்னும் டில்லி கேப்பிட்டல்ஸால் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் டில்லி கேப்பிட்டல்ஸின் அதிகாரியொருவர் தெரிவிக்கையில், 'ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது பாதிக்காக டெல்லி அணி எதிர்வரும் 21ஆம் திகதி (இன்று) அதிகாலை ஐக்கிய அரபு இராச்சியத்துக்குப் பயணம் மேற்கொள்கின்றது.

டெல்லியிலிருந்து உள்நாட்டு வீரர்கள், அணி ஊழியர்களுடன் புறப்படுகிறோம். உள்நாட்டு வீரர்கள் ஏற்கெனவே தனிமைப்படுத்தலில்தான் இருக்கிறார்கள். அங்கு சென்றபின் முறைப்படியான தனிமைப்படுத்துதலும் பயோ பபுளும் தொடங்கும்.

ஸ்ரேயாஸ் அய்யர் தற்போது உடல் தகுதிப் பயிற்சிக்காக ஐக்கிய அரபு அமீரகத்தில்தான் இருக்கிறார். வெளிநாட்டு வீரர்கள் தம் தொடர் முடிந்த பின்னர் வந்திணைவார்கள். இரண்டாவது பாதிக்கு யார் தலைவர் என இன்னும் முடிவு செய்யவில்லை' - என்றார். (ம)

# 50 வீதமான ரசிகர்கள் ஐ.பி.எல்லில் அனுமதி

## பி.சி.சி.ஐ நம்பிக்கை



**சென்னை, ஓக.** 21

**ஐ.பி.எல் தொடரின்** இரண்டாவது **பாதியில்** 50 வீதமான **பார்வையாளர்களேனும் அனுமதிக்கப்படுவார்கள்** என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது. எனினும் இது தொடர்பான எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பையும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் கிரிக்கெட் சபை விடுக்கவில்லை.

இந்த வருடத்துக்கான ஐ.பி.எல் தொடர் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பமானது. இந்தியாவில் இடம்பெற்ற இந்தத் தொடரில் ரசிகர்கள் அனுமதிக்கப்படவில்லை. கொரோனா தொற்றுச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு ரசிகர்கள் இல்லாமல் தொடர் நடத்தப்பட்டது. எனினும் வீரர்களின் பயோ பபுள் வளையத்துக்குள் கொரோனா ஊடுருவியதை அடுத்து தொடர் கைவிடப்பட்டது.

இந்த நிலையில் தொடரின் இரண்டாவது பாதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் பங்கெடுப்பதற்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, மும்பை இந்தியன்ஸ் அணி என்பன ஏற்கனவே ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ள நிலையில் ஏனைய அணிகள் அங்கு பயணப்படத் தயாராகி வருகின்றன. இத்தகையதொரு பின்னணியிலேயே ஐ.பி.எல் தொடரின் இரண்டாவது பாதியில் ரசிகர்களின் பங்கெடுப்பு தொடர்பான அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இதன்படி, கொவிட் தொற்றுக்கான இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்கள் ஆட்டத்தைப் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள். 50 வீதமான பார்வையாளர்களுடன் ஆட்டம் நடத்தப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபை நம்பிக்கை தெரிவித்தது. எனினும் எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பையும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் கிரிக்கெட் சபை விடுக்கவில்லை. (ம)

# நேபாளத்துடன் மோதுகின்றது இலங்கையணி

கொழும்பு, ஓக. 21

இலங்கை அணி நேபாளத்துடன் ரி20 தொடரொன்றில் விளையாடுவது உறுதியாகியுள்ளது. ஒக்ரோபர் மாதம் ரி20 உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடருக்கு முன்பாகவே இலங்கை அணி நேபாளத்துடன் குறித்த ரி20 தொடரில் விளையாடவுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் தகுதிச் சுற்றில் விளையாடி பிரதான சுற்றுக்குள் நுழைய வேண்டிய கட்டாயம் இலங்கை அணிக்கு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




# ஆப்கான் – பாகிஸ்தான் ஆட்டம் இலங்கையில்!

கொழும்பு, ஓக. 21

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரை இலங்கையில் நடத்துவதற்கு முடிவாகியுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான இந்தத் தொடர் இன்னும் சில வாரங்களில் ஆப்கானிஸ்தானில் நடைபெறுவதாக இருந்தது. எனினும் அங்கு தற்போது நிலவுகின்ற அரசியல் குழப்பங்கள் காரணமாக சுற்றுத் தொடரை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணத்தால் இந்த இரு அணிகளுக்கும் இடையிலான தொடரை இலங்கையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.